பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 06 திங்கட்கிழமை 20.01.2020 கதிர் 76

இனி இது ரகசியம் அல்ல!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் – குறிப்பாக இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் – களமிறங்கப் போகும் வேட்பாளர்கள் யார் என்ற விவகாரம் இப்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. பக்கம் 02

# கூட்டமைப்புக்குத் தலைவராகும் எண்ணம் எனக்கு இப்போதில்லை

## அதற்கான சூழ்நிலையும்இப்போது எழவில்லை என்கின்றார் சுமந்திரன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைவராகும் எண்ணம் எனக்கு இப்போது இல்லை. அதற்கான சூழ்நிலையும் உருவாக இல்லை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே. தலைமை மாற்றம் என்பது விசமத்தனமான பிரசாரம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன். பக்கம் 03

## விஜயகலாவுடன் சுமந்திரனுக்கு எந்த வித டீலும் கிடையாதாம்!

அடித்துச் சொல்கின்றார் அவர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.20

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா பக்கம் 02

## மாத்தறை பஸ் – ரிப்பர் நேருக்கு நேர் மோதல்

ஐவர் பலி ;15 பேர் வரை படுகாயம்



கதிர்காமத்தில் இருந்து கொழும்பு வந்த பஸ் ஒன்று மாத்தறை திஸ்ஸ வீதியின் ரன்ன, ஹுங்கம பகுதியில் ரிப்பர் பக்கம் 03

## நான்கு இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கடலில் கைது



யாழ்ப்பாணம், ஜன. 20

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் நான்கு பேர் பக்கம் 03

## ரெலோ சார்பில் களமிறங்குவோர் யார், யார்? நேற்றைய வவுனியாக் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.20

வவுனியாவில் நேற்றுப் பகல் நடைபெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தில், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அக்கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய ஆலோசனையும் இடம் பக்கம் 03

## ஜனாதிபதியும் அவரின் இந்த அரசும் தமிழர்களை முற்றாகப் புறக்கணிப்பு



சர்வதேசம் இதில் தலையிட வேண்டும் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

(நமது வவுனியாச் செய்தியாளர் கி.வசந்தரூபன்)

ஜனாதிபதியும் இந்த அரசாங்கம் தமிழ் பேசும் மக்களை புறக்கணிக்கும் செயற்பாட்டையே செய்து வருகின் பக்கம் 03

## விரைவில் ரெலோவின் பொன்விழா

யாழ்ப்பாணம்,ஜன.20

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) விரைவில் பொன் விழாவை கொண்டாடவுள்ளது. பெரும்பாலும் பக்கம் 03

## அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழரின் போராட்டம் தொடரும்!



திருமலையில் தெரிவித்தார் சம்பந்தன்

திருமலை, ஜன. 20

தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை எமது இனத்தின் போராட்டம் தொடரும். எத்தனை தடைகள் வந்தாலும் அதைத் தகர்த் பக்கம் 02

## பட்டம் பெற்றுள்ள பாடத்துக்கேற்ப உரிய துறைகளில் உடனடி நியமனம்

பட்டதாரிகளிடம் ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஜன. 20

தொழிலை எதிர்பார்த்துள்ள அனைத்துப் பட்டதாரிகளையும் தேசிய பொருளாதாரத்தில் நேரடிப் பங்காளர் பக்கம் 02

## காணாமற்போன சிறுவர்கள் மூவரும் ஆலய மண்டபத்தில் ஆழ்ந்த உறக்கம்

நேற்றுக் காலை மீட்டனர் பொலிஸார்



யாழ்ப்பாணம், ஜன. 20

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் பக்கம் 02

## கருணாவுக்கு மனநிலைப் பாதிப்பு சு.க. இப்போதுதான் கண்டுபிடிப்பு



கொழும்பு, ஜன.20

தனது தேசிய தலைவர் பிரபாகரன் மாத்திரமே என கருணா தெரிவித்துள்ளமையானது அவருக்கு மனநிலை பக்கம் 02

## பொருளாதாரம் உயர்ந்தால்தான் அரச ஊழியருக்கு சம்பள உயர்வு

ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 20

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட வசதிகளை விரிவுபடுத்துவதற்கு நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடையவேண்டும். இதற்காக அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித் பக்கம் 03

## குடாநாட்டில் குழாய்க் கிணறு அமைக்க இனிக் கட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு பக்கம் 03

## பட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களாக்கும்வகையில்உடனடியாக அரச தொழில்களுக்கு நியமிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நாடு முழுவதும் தொழிலை எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பட்டதாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரச, பகுதியளவு அரச மற்றும் திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்க்கும் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளது.

தொழில்வாய்ப்புகளை பெறுவோருக்குத் தலைமைத்துவம் மற்றும் அரச சேவை பற்றிய முறையான பயிற்சியும் விளக்கமும் வழங்கப்படவுள்ளந்த. மக்களுக்கு பொறுப்புக்கூறும் அரச சேவையொன்றையும் அரச ஊழியர்களையும் உருவாக்குவதே எனது நோக்கமாகும்.

பயிற்றப்படாத ஊழியர்கள் நாட்டுக்குஅந்நியச்செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய பிரிவினராக உள்ளனர். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஒரு பலமான அடிப்படையுடன் கைத்தொழில் துறை நாட்டில் கட்டியெழுப்பப்படவில்லை. நாட்டின் எதிர்கால பயணத்திற்கு உள்ள பெரும் பலம் மனிதவளமாகும்.

எனவே நாட்டின் கற்ற இளையோர்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து, அவர்களைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்காளர்களாக ஆக்குவது முக்கிய தேவையாகும்.

ஒரு சிறு பிரிவினரால் ஏற்படும் தவறுகளின் காரணமாக முழு அரச சேவையின் மீதும் குற்றம் சுமத்தப்படும் நிலை உருவாகியுள்ளது. அன்றாடம் இடம்பெறும் தவறுகள் முழு அரச சேவைக்கும் இழுக்கை ஏற்படுத்துகின்றன.

எதிர்காலத்தில் அனைத்துப் பிள்ளைகளையும் நாட்டின் பொருளாதாரத்தின் பங்காளர்களாக மாற்றும் கல்வி முறைமையொன்று திட்டமிடப்பட்டு வருகின்றது. உலகின் ஏனைய நாடுகளின் தொழில்வாய்ப்புகளுக்குப் பொருத்தமான வகையில் கல்வி முறைமையைத் தயாரிக்கவேண்டிய தேவையுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டுத்தொழிற்சந்தைகளுக்குப் பொருத்தமான வகையில் புதிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட மூலோபாயத்தின் ஊடாகவே அதனை செய்ய வேண்டும்.

இளையோர்கள் தொழிற் தேடிச் செல்வதற்குப் பதிலாக தொழில்வாய்ப்புகள்இளையோரைத் தேடிவரும் கல்வி முறைமையொன்றை விரைவாக ஏற்படுத்த வேண்டும் – என்றார்.

இராஜாங்க அமைச்சர்கள் கொன் சேமசிங்க, ஜானக வக்கும்புர, கஞ்சன விஜேசேகர, கனக்க ஹேரத் ஆகியோரும் நாடாளுமன்றஉறுப்பினர்களான நிரோன்பிரேமரத்ன, டி.பி.ஜானக்க, தேனுக விதானகமகே, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெறிந்து போராடுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொங்கல் விழா நிகழ்வு திருகோணமலை நகராட்சி மன்ற நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது போராட்டத்தைத் தோற்கடிப்பதற்காகப் பலர் முயற்சி செய்தபோதும் அது இன்னும் பன் மடங்கு பலத்துடன் எமது மக்களின்ஆணையுடன்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஒற்றுமை எமது மக்களுக்கான நிரந்தரத் தீர்வு கிட்டும் வரை நிலைத்திருக்கவேண்டும். இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் மக்களின் ஜனநாயக முடிவைத்தான் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

ஒருமித்த குரலில் எவருக்கும் அடிபணியாது செயற்பட்டு வருவதனால் இன்று சர்வதேச சமூகமும் எம்மை அங்கீகரித்து எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கவேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

எமது தீர்வு நோக்கிய பயணம் சிறப்பாகவே நகர்ந்து சென்றது. பெரும்பான்மையின மக்கள் மத்தியில்ஏற்பட்ட குழப்பநிலையே இந்த ஆட்சி மாற்றத்திற்குக் காரணம். இருப்பினும் நாம் எமக்கான தீர்வு கிட்டும்வரை உறுதியாகவும் தெம்பாகவும் செயற்பட்டு வருகின்றோம்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கூறிய விடயங்களை அரசு அமுல்படுத்தவேண்டும் – என்றார்.

இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பொங்கல் விழா நிகழ்வில் நாடாளுமன்றஉறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், க.துரைரெட்ணசிங்கம், கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், யாழ் மாநகரசபைமுதல்வர் இ.ஆனல்ட், திருகோணமலை நகரசபைத் தலைவர் நா.இராஜநாயகம், பட்டணமும் சூழலும் பிரதேச சபைத்தலைவர் எஸ்.ஞானகுணாளன், வெருகல் பிரதேச சபைத் தலைவர் க.சுந்தரலிங்கம் உட்பட கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மூலக்கிளை பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற்போன சிறுவர்கள் மூவரும் ஆலயம் ஒன்றின் மண்டபத்தில் உறக்கத்திலிருந்த நிலையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டனர்.

நேற்று முன் தினம் மாலை 6.30 மணியளவிலிருந்து இவர்கள் காணாமற்போனமையையடுத்து அந்தக் கிராமத்தில் பெரும் பரபரப்பும் அச்சமான நிலையும் காணப்பட்டது.

கலியுகமூர்த்தி மதுசன் (வயது – 10), புஸ்பகுமார் செல்வகுமார் (வயது – 10) ஆகிய இருவருடன் சந்தியோ தனுசன் (வயது – 17) என்ற மனநலம் குன்றியவரும் காணாமற்போயிருந்தனர்.

இந்த நிலையில் ஊர் மக்கள் திரண்டு இரவோடு இரவாக சிறுவர்கள் மூவரையும் தேடினர். பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்களும்விசாரணை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் சிறுவர்கள் மூவரும் ஆலயம் ஒன்றின் மண்டபத்தில் உறக்கத்திலிருந்த நிலையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டனர். (ஐ–07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"சரா எம்.பிக்கு ஆசனம் வழங்க வேண்டாம்; மாவையிடம் நேரில் வலியுறுத்தினார் சுமந்திரன்!"* – என்று நேற்று இணையம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

உண்மை – பொய்மை அறிவதற்காக கொஞ்சம் விவரமாக உள்ளே இறங்கிப் பார்த்தேன். அந்தச் செய்தியில் கூறப்பட்ட அந்தத் தகவல் உண்மைதான்.

கடந்த வெள்ளியன்று மேற்படி விடயத்தை மாவை சேனாதிராசாவிடம் சுமந்திரன் நேரில் தெரிவித்தார் என தமிழரசுக் கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவரை மேற்கோள்காட்டி அந்த இணையம் செய்தி வெளியிட்டிருந்தது.

மாவை சேனாதிராசாவிடம் சுமந்திரன் அந்த விடயத்தை தெரிவித்தபோது அந்த மூத்த பிரமுகர் ஒருவர் மட்டுமே அருகில் இருந்தார் என அறியவந்தது.

சரா எம்.பிக்கு மீண்டும் போட்டியிடுவதற்கு வாய்ப்புக் கொடுக்கத் தேவையில்லை, கொடுக்கக் கூடாது என்று மாவை சேனாதிராசாவிடம் சுமந்திரன் தெரிவிப்பது இது முதல் தடவையல்ல. முன்னரும் சில தடவைகள் கூறியிருக்கின்றார். அதற்குப் பக்கபலமாகப் பல காரணங்களையும் அவர் அடுக்கியிருக்கின்றார் என்பதும் உண்மை.

ஆனால கடந்த வெள்ளியன்று சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தமையின் பின்னால் கட்டவிழ்ந்த விடயங்கள் வேறு.

வட்டுக்கோட்டைத் தொகுதி தனக்கென ஒதுக்கப்பட்டமையால் அங்கு தன்னை மீறி யாரும் – கூட்டமைப்பினர் – அகலக் கால் வைக்கக்கூடாது என்பது சரா எம்.பியின் நிலைப்பாடு.

அதையும் மீறி அண்மையில் அராலியில் அடுத்தடுத்து இரண்டு கூட்டங்களை நடத்தியிருக்கின்றார் சுமந்திரன்.

இரண்டாவது கூட்டத்துக்கு சரா எம்.பியின் கட்சி அலுவலகத்தில் பணியாற்றும் பெண் ஒருவர் சென்றிருக்கின்றார். அங்கு சுமந்திரன் ஆற்றும் உரையை அவர் தமது தொலைபேசியில் பதிவு செய்துகொண்டிருந்தார். அது குறித்து சுமந்திரனின் உதவியாளர்கள் – கூட்ட ஏற்பாட்டாளர்கள் – சுமந்திரனை நேரத்துடனேயே 'அலேர்ட்' செய்திருப்பார்கள் போலும்.

திடீரென அந்தப் பெண் எழுந்து *"இங்கு (வட்டுக்கோட்டைத் தொகுதியில்) எல்லா விடயங்களுக்கும் நிதி சரா எம்.பிதான் ஒதுக்கியிருக்கின்றார். அப்போது நீங்கள் வரவில்லை. இப்போது மட்டும் ஏன் உதவி கேட்டு இங்கு வந்து கூட்டம் வைக்கிறீர்கள்?"* – என்ற சாரப்பட கேள்வி எழுப்பி சுமந்திரனிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார் என்று தகவல்.

தொகுதி ரீதியாக நிதி ஒதுக்கீட்டுப் பொறுப்பு வழங்கப்பட்டமையை விளக்கிய சுமந்திரன் தாம் அங்கு யாரிடமும் உதவி கேட்டு வரவில்லை என்றும், அங்குள்ள மக்களும் பிரதிநிதிகளும் தங்கள் பிரச்சினைகள், விடயங்கள் குறித்துத் தம்முடன் விரிவாகப் பேச விரும்பி அழைத்தமையால் அங்கு வந்திருக்கின்றார் என்றும் தெரிவித்தாராம்.

எனினும் அந்தக் கூட்டம் முடிவதற்கு முன்னரே அந்தப் பெண் எழுந்து சென்றுவிட்டார்.

ஓரிரு நாள்களுக்கு முன்னர் அந்தக் கூட்டப் பேச்சின் பதிவை எடுத்துக்கொண்டு மாவை சேனாதிராசாவின் இல்லத்துக்குச் சென்ற சரா எம்.பி., மாவையிடம் சுமந்திரன் குறித்து நீண்ட பட்டோலை ஒன்றை வாசித்திருக்கின்றார். அந்தக் கூட்ட ஒலிப்பதிவைச் செவிமடுக்கும்படியும் வற்புறுத்தியிருக்கின்றார். ஆனால் மாவையர் அது குறித்து அப்போது அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. தலையாட்டி சமாளித்தார் என்று கேள்வி.

அதன் பின்னர் கடந்த வெள்ளியன்று தமிழரசுவின் யாழ். அலுவலகத்தில் இன்னொரு மூத்த பிரமுகரோடு அமர்ந்திருந்த மாவை சேனாதிராசா, சுமந்திரனைக் கண்டதும் இது குறித்து பிரஸ்தாபித்தார். சரா எம்.பி. பெரியகுற்றச்சாட்டுப்பட்டியலோடு தம்மிடம் வந்தமை குறித்தும் கூறியிருக்கின்றார் மாவை.

அப்போதுதான் சுமந்திரன் நடந்தவற்றை விலாவாரியாக மாவையரிடம் விவரித்திருக்கின்றார்.

*"அப்போது சரா எம்.பிக்கு இம்முறை பட்டியலில் வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்று கூறினீர்களா?"* – என்று சுமந்திரனிடம் மிக நெருக்கமான ஒருவர் கேட்டார்.

*"ஆம் கூறினேன். அவருக்கு இன்னொரு தடவை வாய்ப்புக் கொடுக்கவேண்டிய தேவை இல்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதுதான் எனது கருத்து. அதனை நான் முன்னரும் கட்சித் தலைமைக்குத் தெரிவித்திருக்கிறேன். அன்றும் தெரிவித்தேன். எனது கருத்தையும் நிலைப்பாட்டையும் நான உறுதியாக வெளிப்படுத்துவேன். அதில் ஒளித்து மறைத்துப் பேச எனக்கு எந்தத் தேவையுமில்லை"* – என்று வெளிப்படையாகப் பதில் சொன்னார் சுமந்திரன் என அறிய வந்தது.

இந்த விவகாரத்தில் சில சுவையான அம்சங்கள் உண்டு. அவற்றையும் வாசகர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பது அவர்கள் சில கருத்து நிலைப்பாடுகளுக்கு வருவதற்கு உதவக்கூடும்.

ஒன்று – செய்திகள் தொடர்பான விடயத்தில் சரா எம்.பியின் பத்திரிகைக்கு எதிராக பல வழக்குகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவற்றுக்காக வருடக்கணக்காக, கட்டணம் ஏதுமின்றி நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடி வருபவர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்தான். சரா எம்.பியுடன் அரசியல் ரீதியாக என்ன முரண்பாடு வந்தாலும் சட்டத்தரணி என்ற முறையில் தாம் எடுத்த பொறுப்பை என்ன செலவு, நேரம் வீணானாலும் தொடர்வதில் சுமந்திரன் உறுதியாக இருக்கின்றார்.

இரண்டு – சரா எம்.பிக்கு அடுத்த தடவை இடம் கொடுக்கக்கூடாது என்று கூறும் சுமந்திரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நியமனக் குழுவில் இல்லை. ஆனால் சரா எம்.பி. அதில் ஓர் உறுப்பினர்.

மூன்று – சரா எம்.பி. அண்மையில் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கட்சியின் முன் அனுமதியின்றிப் போய்ச் சந்தித்தமை தவறு என மாவையிடம் கூறியிருக்கின்றார் சுமந்திரன். ஆனால் சரா எம்.பி. கட்சியின் சார்பில் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற சார்பில் அந்தச் சந்திப்பில் ஈடுபடவில்லை. பத்திரிகை உரிமையாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு. அதில் பத்திரிகையின் உரிமையாளர் என்ற கோதாவில் சரா பங்குபற்றினார் எனக் கூறப்படுகின்றது. அதற்குக் கட்சியின் முன்அனுமதிபெறப்படவேண்டும் என்று கூறுவது அபத்தம்.

கட்சியின் நலனுக்காக – பத்திரிகையின் ஆதரவைத் தனக்கு பக்கபலமாக வைத்திருப்பதற்காக – நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை பத்திரிகை உரிமையாளருக்கு கூவி விற்றபோது அது குறித்து மாவையும் ஏனையோரும் சிந்தித்திருக்க வேண்டிய விடயம் இது.

'பத்திரிகைமுதலாளி'யை 'ஊடகப் போராளி'யாகப் பாசாங்கு பண்ணி வாக்குத் திரட்ட அனுமதித்ததன் மூலம் கட்சியின் கட்டமைப்பைச் சீரழிக்க இடம் கொடுத்தவர்கள் அதன் விபரீதத்தை இப்போது அனுபவிக்கின்றார்கள். அவ்வளவுதான்.

- மின்னல் -

## விஜயகலாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துகொள்வது தொடர்பாக எந்தவித பேச்சுக்களிலும் ஈடுபடவில்லை. அவ்வாறு இணைவது தொடர்பாக வெளிவந்த செய்திகள் பொய்யானவை.

–இவ்வாறு நேற்று அடியோடு மறுத்துரைத்தார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

விஜயகலா மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராகவும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தற்போதும் இருக்கின்றார். ஆகவே அவர் எங்களது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளப் போவது தொடர்பிலோ அல்லது எதிர்வரும் தேர்தலில் எங்களுடன் இணைந்து போட்டியிடப் போவதாகவோ எந்த முயற்சியும் இல்லை.

அவ்வாறு இணைந்து கொள்வது தொடர்பில் எங்களுடன் எந்தவிதமான பேச்சுக்களையும் அவர் முன்னெடுக்கவில்லை. ஆகையால் எங்கள் கட்சியில் இணைந்து நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடப் போகிறர் எனச் சொல்லப்படும் செய்திகளில் எந்தவித உண்மைகளும் இல்லை.

எனக்குத் தெரிந்த வகையில் அவர் எங்களுடன் எந்தவிதமான பேச்சுகளையும் நடத்தவுமில்லை – என்றார். (ஐ–07)

## கருணாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்பு அல்லது வேறு ஏதாவது ஒன்று இருக்கின்றது என்பதையே காட்டுகிறது எனத் தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீரகுமார திஸாநாயக்க.

அநுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரபாகரனிடம் இருந்து தனது உயிரை மிகவும் கஷ்டப்பட்டு காப்பதற்காக அவர் முன்னைய அரசாங்கத்துடன் இணைந்திருந்தார் என்பதை கருணா நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் விடுதலைப் புலிகளால் அவரது குடும்பத்துக்கும் கடும் அச்சுறுத்தல்கள் இருந்தன.

எனவே முன்னர் தனக்கு உயிர் அச்சுறுத்தல்கள் இருந்த நிலையில் தற்போது தனது தேசியத் தலைவர் பிரபாகரன்தான் என அவர் தெரிவிக்கிறார் எனில் நாட்டில் ஏனையோருக்கு சட்டம் செயற்படுத்தப்படுவது போல கருணாவுக்கு எதிராகவும் சட்டக் செயற்படுத்தப்படவேண்டும். – எனக் கூறினார்.

## கூட்டமைப்புக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில நாள்களாக சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியிருந்த கூட்டமைப்பின் தலைமை மாற்றம் தொடர்பான செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் மாற்றம் என்றோ அல்லது அதனை நான் எடுக்கப் போகின்றேன் என்றோ வெளிவந்த செய்திகளில் எந்தவித உண்மையுமில்லை.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாதான். அவர்தான் இன்றும் தலைவராக இருக்கின்றார். அவர் தலைவர் பொறுப்பில் இருந்து தான் இறங்குகின்றார் என்றோ அல்லது அந்தத் தலைமைப் பொறுப்பில் இனியும் நீடிக்கப் போவதில்லை என்றோ எந்த விதமான அறிவித்தலும் வரவில்லை.

ஆகையால் இந்தத் தலைமை மாற்றம் என்ற செய்தி வேண்டுமென்றே விசமத்தனமாகப் பரப்பப்படும் ஒரு பிரசாரம். அவ்வாறான தலைமை மாற்றம் மேற்கொள்கின்ற முயற்சி ஏதும் நடக்கவில்லை. எந்தவிதமான மாற்றமும் இப்போதைக்கு நடைபெறப் போவதும் இல்லை.

கூட்டமைப்புக்கு ஒரு புதிய தலைவர் வருவதாக இல்லை. அதற்கான சூழ்நிலை உருவாகவும் இல்லை. அப்படியான நேரத்தில் அதை ஒரு பெரிய பேசு பொருளாக எடுத்து தங்கள் கருத்துக்களைச் சொல்வதெல்லாம் வேண்டுமென்று விசமத்தனமாகச்செய்யப்படுகின்ற ஒரு பிரசாரம்.

கூட்டமைப்புக்குள் ஒரு தலைமைப் பதவி மாற்றம் ஏற்படுவதாக இருந்தால்கூட அது கூட்டமைப்பின் உள் விவகாரம். மற்றக் கட்சிகளுக்கு அதில் எந்தவிதமான ஈடுபாடுகளும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

குறிப்பாக சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்கு யார் தலைவராக இருக்க வேண்டுமென்று நாங்கள் யாரும் எந்தக் காலத்திலும் கருத்துச் சொல்வது கிடையாது. அதேபோல் தமிழ்த்தேசியமக்கள்முன்னணிக்கு தலைவர் யாராக இருக்கவேண்டுமென்றும் நாங்கள் ஒரு காலமும் சொல்வதில்லை.

ஏனெனில் அது அவர்களுடைய கட்சி விவகாரம். ஆகையால் கூட்டமைப்பிற்குள் இல்லாதவர்கள் கூட்டமைப்பின் தலைவராக யார் வரவேண்டும், யார் வரக்கூடாது என்று சொல்வதெல்லாம் வேடிக்கையான விடயங்கள். அது அவர்களோடு எந்தவிதத்திலுமே சம்பந்தமில்லாத விடயங்களாகத்தான் இருக்கின்றன – என்றார். (ஐ-07)

## பொருளாதாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

நாடு முழுவதும் தொழிலை எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பட்டதாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மக்கள் வியர்வை சிந்தி சம்பாதிக்கும் பணத்தின் மூலமே அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகின்றது. வினைத்திறனானதும் முறையானதுமான அரச சேவையின் மூலம் தமக்கு ஊதியம் வழங்கும் மக்களுக்கு நியாயமானதொரு சேவையை பெற்றுக் கொடுப்பது அரச ஊழியர்களின் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ரெலோ சார்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது. அக்கட்சியின் பிரமுகர் ஒருவரை மேற்கோள்காட்டி அந்த இணையம் வெளியிட்ட செய்தியில் வேட்பாளர் தெரிவுகள் குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:–

### வன்னியில்

வன்னித் தேர்தல் மாவட்டத்தில், மன்னாரில் செல்வம் அடைக்கலநாதனும், முல்லைத்தீவில் வினோநோகராதலிங்கமும் களமிறங்கவுள்ளனர். வவுனியாவில் பொருத்தமான ஒருவரைத் தேடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மாவட்டத்தில், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) களமிறங்கவுள்ளார். மிக இளம் வயதில் எம்.பியானவர்களில் ஒருவர் என்ற சிறப்பிற்குரிய ஜனா, கடந்த ஒரு சில நாடாளுமன்ற தேர்தல்களில் மயிரிழையில் தோல்வியடைந்திருந்தார். கடந்த இரண்டு தேர்தல்களிலும் தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூர் செயற்பாட்டாளர்கள் அவருக்கு எதிராகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இம்முறை வெற்றியடையும் வாய்ப்புஇருப்பதாகக் கருதப்படுவதால் அவர் களமிறங்குகிறார்.

இதேவேளை, மட்டக்களப்பின் ரெலோவின் இன்னொரு முக்கியஸ்தரான இந்திரகுமார் பிரசன்னா நாடாளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிடவில்லையெனத் தெரிவித்தார். நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் பொருளாதார நிலைமை தனக்கில்லையென அவர் தெரிவித்தார். அதனால் அடுத்த மாகாணசபை தேர்தலில் அவர் போட்டியிடுவார்.

### அம்பாறையில்

நேற்றைய கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் தற்போதைய எம்.பியான கோடீஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில், மாவட்டத்தில் கோடீஸ்வரன் மீண்டும் களமிறங்குவார் எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், நேற்றைய கூட்டத்தில் ஹென்றி மகேந்திரன் கலந்து கொள்ளவில்லை. கோடீஸ்வரன் போட்டியிட்டால், அந்த பட்டியலில் தான் போட்டியிட மாட்டார் என ஹென்றி மகேந்திரன் ஏற்கனவே கட்சிக்கு அறிவித்திருந்தார். அதை சிலர் சுட்டிக்காட்டினார்கள். 'அது அவருடைய பிரச்சனை, அவருக்கு வழங்கும் வாய்ப்பை பயன்படுத்துவதா, இல்லையா என்பதை அவர் தீர்மானிக்கட்டும்' – எனத் தலைமையால் சொல்லப்பட்டது. அத்துடன், மூன்றாவது இன்னொரு உறுப்பினரையும் களமிறக்க தீர்மானிக்கப்பட்டது. அவர் யார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

### திருகோணமலையில்

திருகோணமலை மாவட்டத்தில் கட்சியின் செயலாளர் நித்தியானந்தம் தாம் களமிறங்கப் போகிறார் என விருப்பம் தெரிவித்தார். எனினும், மூதூர் மற்றும் திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிறிதொருவரை களமிறக்கலாமென வேறு சிலர் தெரிவித்தனர். அது ஏற்கப்பட்டு, பொருத்தமான வேட்பாளரை தெரிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில்

யாழ் மாவட்டத்தில், யார் களமிறங்குவதென்ற இழுபறி நிலவுகிறது. கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேனைக் களமிறக்குவதென முன்னர் தலைமை முடிவு செய்திருந்தது. அதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் அறிவித்து விட்டார்கள். எனினும், யாழ். வேட்பாளர் நேற்றும் தீர்மானிக்கப்படவில்லை, பலமான வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டுமெனத் தலைமை வலியுறுத்தியது.

இதேவேளை, கட்சியின் யாழ் மாவட்ட பிரமுகர் விந்தன் கனகரட்ணமும் வேட்பாளராக களமிறங்கும் முஸ்தீபில் இருக்கிறார் எனத் தெரிகிறது. சுரேன்தான் வேட்பாளர் என்ற தகவல் பரவியதையடுத்து, அதிருப்தியில் நேற்றைய கூட்டத்தை அவர் தவிர்த்திருந்தார் என்றும் கூறப்பட்டது. கட்சி ஏற்கனவே முடிவெடுத்துவிட்டு வருகிறார்கள், இந்தக் கூட்டத்திற்கு ஏன் வர வேண்டுமென அவர் கேள்வியெழுப்பினார் என ஒருவர் குறிப்பிட்டார்.

எனினும், அவர் கூட்டத்திற்கு வந்துதனதுதரப்புநியாயங்களைப் பேசியிருக்க வேண்டுமெனத் தலைமையால் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, விந்தனையும் உள்ளடக்கியதாக யாழ் மாவட்டக் கிளையைக் கூட்டி, யாழ் வேட்பாளரைத் தெரிவு செய்வதென முடிவானது.

– இவ்வாறு அந்த இணையத்தளச் செய்தி தெரிவித்தது.

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதம் 8 அல்லது 9 ஆம் திகதிகளில் அந்த நிகழ்வை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று வவுனியாவில் நடந்த ரெலோவின் தலைமைக்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரெலோவின் பொன் விழா ஏற்கனவே கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். எனினும், இயற்கை அனர்த்தங்களினால் அது தள்ளி வைக்கப்பட்டிருந்தது. அடுத்த மாதம் 8 அல்லது 9ஆம் திகதிகளில் பொன்விழாவைக் கொண்டாடுவதென நேற்று முடிவானது. சரியான திகதி வரும் நாள்களில் தீர்மானிக்கப்படும்.

இதேவேளை, பொன்விழா கொண்டாட்டங்களுடன், கட்சியின் பொதுக்குழுவை கூட்டி, நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

– இவ்வாறு கூட்டத்தில் பங்குபற்றிய ஒருவரை மேற்கோள்காட்டி அந்த இணையச் செய்தி தெரிவித்தது.

## நான்கு இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டணத்தைச் சேர்ந்த பாரதி, சசிகுமார், மணி, அசோக்குமார் ஆகிய நான்கு மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பு அருகே நேற்று முன் தினம் இரவு தொழில் ஈடுபட்டிருந்தவேளை இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் இவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து காங்கேசன் துறைக் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

நேற்று மாலை யாழ். பண்ணையிலுள்ள நீரியல் வளத் திணைக்களத்துக்குக் கொண்டு வரப்பட்ட இந்த நான்கு மீனவர்களையும் நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இலங்கைக் கடற்படையினர் தம்மைத் தாக்கித் தமது படகையும் கடலுக்குள் மூழ்கடித்தே தம்மைக் கைது செய்துள்ளனர் என இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றனர். இந்தப் போக்குக்கு எதிராக சர்வதேசம் இதில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைமைக் குழுக் கூட்டத்தின் பின் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி எமது கட்சியின் 50 ஆவது ஆண்டு விழாவை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அன்றைய தினம் கட்சியின் செயலாளர் நாயகத்தைத் தெரிவு செய்யும் முடிவையும் நாடாளுமன்றத் தேர்தலிற்கான தமிழீழ விடுதலை இயக்கத்தின் வேட்பாளர்கள் யார் என்பதையும் நாம் தெரிவிக்க இருக்கிறோம்.

எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை நாம் மீள அழைக்கப்போவதில்லை. அவர்களிற்கு எமது கட்சியில் இடமில்லை.

கூட்டமைப்பின் தலைமை மாறினால் அதில் இணையத் தயார் என்று முன்னாள் முதலமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்து என்னை பொறுத்த வரை நல்ல விடயமாகப் படுகிறது. இதனைத் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் பேசி அப்படி ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கான முயற்சியை செய்யலாமே தவிர, இது ஒரு சாத்தியமான விடயம் என நான் கூறமுடியாது. நாம் ஒற்றுமையாக செயற்பட்டு, தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்தால், வடகிழக்கிலே அதிக ஆசனங்களைப் பெற்று எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆணையை வலுவாக பெற்றிருக்க முடியும். எனவே அவரும் வெறும் பேச்சிலே மட்டும் கருத்துக்களைச் சொல்லக் கூடாது.

ஆனால் எமது மக்களின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று வாயளவிலே சொல்லுகின்ற யாருமே எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகவே உளரீதியாகச் சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் இந்த விடயத்திலே ஒற்றுமை கொள்ளக் கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும். அவருடைய கூற்றினை நாம் சிந்திக்க வேண்டும். அவரை உள்வாங்கும்போது பலமான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழும். அந்த முயற்சியை ரெலோ செய்யும்.

கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் வெளியில் பேசும் போது சொல்லியிருக்கிறார். அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பேசப்படவில்லை. அந்தப் பேச்சு வெறும் உதட்டளவில் இருக்கக் கூடாது. எப்பவும் நாங்கள் மக்களை ஏமாற்றுகின்றவர்களாக இருக்கக் கூடாது. ஒற்றுமையை விரும்புகின்றோம் என்று சொல்லிக் கொண்டு உள்ளத்தில் வேறு விடயமாகச் செயற்படக் கூடாது. என்னைப் பொறுத்தவரை சுமந்திரன் சொன்ன விடயத்தை உளப்பூர்வமாகச் சொல்லியிருக்கின்றார் என்றால் நிச்சயமாக நாங்கள் அவருடன் பேசி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் வருகின்ற கட்சிகளை – மிக முக்கியமாக வடமாகாண முன்னாள் முதலமைச்சரை – உள்ளே எடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கும் என நினைக்கின்றேன். அவர் சொல்லியிருக்கின்ற கருத்தை ஏற்று நடக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமாக விருந்தால் அதை நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம்.

ஜனாதிபதி உட்பட தற்போது இருக்கின்ற அரசாங்கம் தமிழ் பேசும் மக்களை புறக்கணிக்கும் செயற்பாட்டையே செய்து வருகின்றனர். ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரையில் கூட ஒரு சிங்கள மக்களினுடைய ஜனாதிபதியாகத் தான் அவர் கதையைச் சொல்லியிருந்தார். அதில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாகவோ அல்லது எங்களது மக்களது எதிர்காலம் சம்பந்தமாகவோ எந்தக் கருத்தையும் கூறவில்லை. கூடுதலாகத் தன்னுடைய குடும்பம் சம்பந்தமாகவும், சிங்கள மக்களின் விருப்பப்படியான ஜனாதிபதியாக இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்.

நாங்கள் இனவாதிகள் அல்லர் என்பதை எமது மக்கள் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்கள். இனவாதிகளாக இருந்திருந்தால் நாம் சிவாஜிலிங்கத்திற்கு வாக்களித்து இருக்க முடியும். ஆகவே சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சஜித் பிரேமதாஸவுக்கே எமது மக்கள் வாக்களித்திருந்தனர். அந்த வகையில் நாங்கள் இனவாதிகள் அல்லர் என்பதைச் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ள போதும் ஜனாதிபதி பல விடயங்களையும் தற்போதும் கூட சிங்கள மக்கள் சார்பாகத்தான் எடுத்து வருகின்றார்.

அந்தவகையில் வெளிநாட்டுத் தூதர்கள் இங்கு வந்து இவ்வாறான செயற்பாட்டைக் கண்டிக்க வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம், மலையக மக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

அதைவிட மேலாக இன்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானம் தொடர்பில் மோசமான சிந்தனை கொண்டவர்களாக அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற நிலையை வெளிப்படையாகச் சொல்லி வருகின்றார்கள். இந்த விடயத்தில் சர்வதேசம் கவனம் செலுத்த வேண்டும். ஐ.நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த நாங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். தேவைப்பட்டால் வரும் ஐ.நாவின் ஜெனீவாக் கூட்டத்தொடரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக கலந்து கொள்ளவும் தயாராக இருக்கின்றோம். – என்றார்.

## மாத்தறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி நடந்த விபத்தில் 5 பேர் பலியாகினர். 15 பேர் வரை படுகாயமடைந்தனர்.

நேற்று இரவு 9 மணியளவில் இந்த மோசமான விபத்துச் சம்பவம் இடம்பெற்றிதுக்கின்றது

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்பட்டுள்ள படிவத்தில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தப் புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் இது தொடர்பான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிய நடைமுறைகளின் படி குழாய்க் கிணறுகளை அமைக்க விரும்புபவர்கள் புதிய படிவம் ஒன்றில் விண்ணப்பம் செய்ய வேண்டும். அதில் கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஆகியோரின் சிபார்சுகள் மிக அவசியமானது. (ஐ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ராஜபக்ஷ வேறு; பிரேமதாஸ வேறு

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் அதன் அரசியல் தலைவிதியை எழுதி வந்த – தென்னிலங்கையின் – இரண்டு பெரிய தேசியக் கட்சிகளினதும் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கின்றது.

தென்னிலங்கையில் கட்டவிழ்ந்த புதிய அரசியல் கலாசாரம் அந்தக் கட்சிகளின் வரலாற்று வகிபாகத்தையே, இனிமேல் அதே நிலையில் தொடர முடியாதவாறு புரட்டிப் போடும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

பண்டாரநாயக்காக்களினால் தோற்றுவிக்கப்பட்டு, போஷிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, இலங்கையின் அரசியல் செல்நெறியில் கனதியான தாக்கத்தைச் செலுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று தனது முக்கிய வகிபாகத்தை இழந்து பின்தள்ளப்பட்டுள்ளது.

இனி பழைய முக்கிய ஸ்தானத்துக்கு அக்கட்சி வருமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகி விட்டது. வருங்காலத்தில் மூன்று, நான்காம் நிலைக்கு அது தள்ளப்படுவதற்கான ஏது நிலைகளே தென்படுகின்றன.

இதில், சோகம் என்னவென்றால் அரசியலில் நிலை பெறுவதற்கு அந்தக் கட்சி என்ன தந்திரோபாயத்தைப் பின்பற்றியதோ, அதே தந்திரோபயம் மூலமே – அதே வழியிலேயே – அதன் முக்கியத்துவம் இழக்கச் செய்யப்பட்டமைதான்.

சுதந்திர இலங்கையின் முதல் ஐ.தே.கட்சி அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா அதிலிருந்து வெளியேறி 1951 இல் சு.கவை ஸ்தாபித்தார்.

தனது புதிய அரசியல் கட்சியைத் தென்னிலங்கையில் நிலை நிறுத்தவும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை – இனவாதத்தை – அவர் கை யில் எடுத்தார். அது அவருக்கு நன்கு உதவிற்று.

அவரின் பின்னர் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தொடர்ந்து மகள் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, இடையில் சிறிது காலம் மகன் அநுரா பண்டாரநாயக்கா என்று அவர்களது அரசியல் வம்சத்தில் அக்கட்சி திளைத்தது.

ஆனால் ஐ.தே.கட்சியிலிருந்து பண்டாரநாயக்கா பிரிந்து, பேரினவாதப் போக்கைச் சரியான துரும்பாகப் பயன்படுத்தி, தான் ஆரம்பித்த சு.கவை நிலைநிறுத்தினார்.

அதேபோல, சு.கவிலிருந்தபடியே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்து, செயற்படுத்திய ராஜபக்ஷக்கள், அதே பேரினவாதப் பிரசாரத்தைக் கையில் எடுத்து சு.கவைப் பின் தள்ளி, தமது புதிய கட்சியை வலுவுள்ளதாக நிலைநிறுத்தியுள்ளனர். அதில் ஒட்டிவாழும் ஒட்டுண்ணித் தாவரம் போன்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது சுதந்திரக் கட்சி.

அதே நிலைமை மற்றொரு பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வந்து விடுமோ என்ற சூழல் இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

கட்சி யாப்புக்கு மாறாக, அழுத்தங்களைப் பாவித்து – குறிப்பாகக் கட்சியுடன் கூட்டமைத்துள்ள பிற கட்சிகளின் தலைவர்களின் அதீத அழுத்தத்தைப் பயன்படுத்தி – கட்சித் தலைமைப் பதவியைப் பிடிக்கும் சஜித் குழுவின் எத்தனத்துக்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணங்கப் போவதில்லை என்பது பெரும்பாலும் தெளிவாகி விட்டது.

ரணில் தரப்பின் விட்டுக் கொடுப்பு எல்லை தாண்டி விட்டது என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

போகின்ற போக்கில், ஐ.தே.கட்சியின் பெயரும், யானைச் சின்னமும், ஸ்ரீகொத்தா அலுவலகமும், ரணில் விசுவாசிகளான சில மூத்த ஐ.தே.கவினர் உட்பட ஒரு தொகுதியினரும் ஒருபுறம் தங்க –

மறுபுறம் இப்போது நாடாளுமன்றில் இருக்கும் கணிசமான எம்.பிக்களின் ஆதரவுடன் தனித்து ஒரு கட்சியைப் புதிதாகக் கட்டி எழுப்பி அரசியல் செய்ய வேண்டிய சூழ்நிலைதான் சஜித் பிரேமதாஸவுக்கு ஏற்படும் போல தோன்றுகின்றது.

கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்களின் கயிற்றை விழுங்கி, அதனடிப்படையில் அரசியல் செய்ய முயலும் சஜித் தரப்புக்கு இனி இருக்கப் போகின்ற மார்க்கம் பெரும்பாலும் அதுவாகத்தான் இருக்கும்.

தேவையானால், ரணில் தரப்பை விட கூடிய ஆதரவு தனக்கு இருப்பதாக சஜித் தரப்பு வரும் தேர்தலில் காட்டமுடியுமே தவிர, ஐ.தே.கட்சியைப் பிளப்பதன் மூலம் அதற்கு மேல் சஜித் தரப்பு சாதிப்பதற்கு இப்போதைக்கு ஏதுமில்லை என்றே தெரிகின்றது.

சு.கவை விட்டு வெளியேறி, அதனைப் பின் தள்ளி, பெரும் சக்தியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விஸ்வரூபம் எடுக்க வைத்த ராஜபக்ஷக்கள் போன்று, ஐ.தே.கவைப் பிளந்து தாம் உருவாக்கப் போகும் புதிய அணியை விஸ்வரூபம் எடுக்க வைப்பதற்கு பிரேமதாஸாவால் இயலும் என்று இப்போதைக்கு நம்புவதற்கு இடமில்லை என்பதுதான் யதார்த்தம்.

# அமெரிக்காவிலிருந்து அடுத்த வாரம் நாடு திரும்புகின்றார் பஸில் ராஜபக்ஷ

## எனினும் இந்தப் பொதுத்தேர்தலில் போட்டியிடாராம்

கொழும்பு,ஜன.20

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று இரண்டு வாரங்களுக்குப் பின்னர் அமெரிக்காவுக்குச் சென்ற பஸில் ராஜபக்ஷ அடுத்த வாரம் நாடு திரும்பவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் அமெரிக்கப் பயணத்தின் போது தனது அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிட சட்ட நடவடிக்கைகள் எடுத்ததார் எனத் தகவல்கள் வந்தாலும், அவர் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்று பொதுஜனபெரமுன வட்டாரங்கள் தெரிவித்தன.

பல அரசாங்க அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷவைத் தொடர்பு கொண்டு, அமெரிக்க குடியுரிமையை கைவிட்டு, வரவிருக்கும் தேர்தலில் போட்டியிடுமாறு வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால், 2020 பொதுத் தேர்தலில் போட்டியிடத் தனக்கு விருப்பமில்லை என்று பஸில் ராஜபக்ஷ பதிலளித்திருந்தார்.

2020இல் போட்டியிட மாட்டேன் என்றாலும், நிச்சயமாக 2025 தேர்தலில் போட்டியிடுவேன் என்று அவர் தெரிவித்துள்ளாராம்.

# சு.க. ஒழுக்காற்றுக்குழு மீண்டும் கூடுகின்றது

கொழும்பு, ஜன. 20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு மீண்டும் கூடவுள்ளது.

இந்தக் குழு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி கூடுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் கூட்டம் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர்களான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, எஸ்.பி.திஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா ஆகியோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு தெரிவித்தனர் என அவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டு முன்வைக்கப் பட்டது.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜேயமுனி சொய்சா தொடர்பாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்தது.

அதன் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு ஒன்றுகூடி ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரிஷாத் விடயத்தில் சி.ஐ.டி. விசாரணை ஆரம்பமானது

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இரண்டு முறை தலையிட்டார் எனத் தெரிவிக்கப்படும் முறைப்பாடு தொடர்பாக மேற்கு மற்றும் தெற்கு குற்றவியல் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

கைது தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி மீது முன்னாள் அமைச்சர் அழுத்தம் கொடுத்தாரா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

இது தொடர்பாக சட்டத்தரணி பிரேமநாத் சி.பீரிஸ் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் ரிஷாத் பதியுதீன், முன்னாள் இராணுவத்தளபதி மகேஷ் சேனநாயக்க ஆகியோரிடமிருந்து அறிக்கை பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்ட ஒரு நபர் குறித்து விசாரித்தார் என, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

முன்னாள் இராணுவத் தளபதியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஒருவரைக் கைது செய்தமை தொடர்பாக கேட்டார் என ரிஷாத்தும் குறிப்பிட்டிருந்தார்.

பதில் பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்னவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த விசாரணை தொடங்கியுள்ளது.

# கைலாச பிள்ளையார் ஆலயத்தின் இந்து இளைஞர் சங்கப் பொங்கல்







யாழ்ப்பாணம், ஜன. 20

நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த இளைஞர் பொங்கல் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் அடியவர்கள் மற்றும் ஊர்மக்களுடன் வெகுவிமரிசையாக இடம் பெற்றது. (ஐ)

**நாளை 21.01.2020 - செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: கேட்டை பி.இ 1.29 வரை
திதி : துவாதசி பி.இ 3.25 வரை

இராகுகாலம் : 3.35 – 5.05
சுப நேரம் : 11.05 – 12.35

# பொலிஸார் சுட்டு புத்த பிக்கு சாவு!

## ஹுங்கமவில் பதற்ற நிலை

கொழும்பு, ஜன. 20

ஹுங்கம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளை நோக்கிப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பௌத்த மதகுரு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதித் தடுப்பில் பொலிஸாரின் ஆணையை மீறி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது, அந்த வீதியில் பயணித்த வான் ஒன்றில் இருந்த பௌத்த மதகுரு மீது தோட்டா பாய்ந்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மதகுருவின் சடலம் தற்போது அகுனுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால்அந்தப்பகுதியில்பெரும் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.16

உயர்அழுத்தமற்றும்தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும்பராமரிப்புவேலைகளுக்காகநாளை செவ்வாய்க்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**

மகாறம்பைக்குளம் P.S.C பகல அளுத்வத்த கிராமம், மதவுவைத்த குளம், தவசிக்குளம், லக்ஸபானா வீதி, பண்டாரிக்குளம், சாளம்பைக் குளம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்-**

முருங்கனிலிருந்து உயிலங்குளம் வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறைஊடாக முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், செம்மண்தீவு நீர்ப்பாசன சபை I மற்றும் II, பரப்பன் கண்டல், மாதோடட்ம், உயித்திரசங்குளம், Live break பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# விளையாட சென்ற இளைஞனை கைது செய்தனர் இராணுவத்தினர்

யாழ்ப்பாணம், ஜன. 20

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் இளைஞன் ஒருவர் இராணு வத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் நேற்றுமுன்தினம் விளையாடச் சென்றபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆனந்தராசா சுரேஷ்குமார் தெரிவித்தார். (ஐ)

# இரு இலங்கைப் பெண்கள் அபுதாபி விபத்தில் மரணம்

கொழும்பு, ஜன. 20

அபுதாபியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் இரண்டு இலங்கைப் பெண்கள் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் இலங்கையர்கள் உட்பட்ட 6 பேர் கொல்லப்பட்டனர். 19 பேர் காயமடைந்தனர்.

சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபடும் பெண்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸே விபத்துக்குள்ளாகியது. அதிக வேகத்துடன் பயணித்த இந்தபஸ்பாரவூர்தியுடன்மோதியே விபத்துக்குள்ளாகியது. (ஐ)

# கல்விக்கான விசேட செயலணியில் தமிழர், முஸ்லிம்கள் புறக்கணிப்பு

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 20

கல்விக்கான விசேட செயலணியில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் இல்லை. இந்நிலையில் அனைத்து இன மக்களினதும் கல்வியை எவ்வாறு முன்னேற்ற முடியுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவிக்கையில்–

அரசு கல்விக்கான விசேட செயலணி ஒன்றை உருவாக்கியுள்ளது.

இதில் 12பேர் உள்ளடங்கின்றனர். ஆனால், தமிழ் , முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரும் இல்லை.

இந்நிலையில் அனைத்து இனங்களினதும் கல்வியை எவ்வாறு முன்னேற்ற பாதையை நோக்கி கொண்டுச் செல்ல முடியும் – என்றார்.

# வடக்கு – கிழக்கில் தனித்து களமிறங்குகின்றதாம் சு.க.

கொழும்பு, ஜன. 20

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து போட்டியிடுவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அந்தக் கட்சியின் பிரதித் தவிசாளரான இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டணி அமைக்கும்போது பொதுவான சின்னத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்

ஆனாலும் கூட்டணியில் சேர்கின்ற எந்தவொரு கட்சியினதும் சின்னத்தில் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட முடியும்.

ஆனாலும் ஒரு சிலர் சின்னத்தைக் காரணம் காட்டி கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்த முனைகின்றனர்.

இதேவேளை கடந்த 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கில் பொதுஜன பெரமுனவை விட எமது கட்சியே அதிகளவு வாக்குகளை பெற்றிருந்தது.

எனவே பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் மாத்திரம் வேறு சின்னத்திலும் ஏனைய பகுதிகளில் பொதுஜன முன்னணியின் மொட்டுச் சின்னத்தில் களமிறங்க வாய்ப்புள்ளது - என்றார். (ஐ)

# சிங்கலே, ராவண பலய பிக்குகள் நீராவியடிக்கு அதிரடிப் பயணம்

முல்லைத்தீவு, ஜன. 20

சிங்கலே, ராவண பலய என்ற சிங்கள பௌத்த அமைப்புகளைச் சேர்ந்த பௌத்த மதகுருமார்கள் அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு விஜயம் செய்தனர்.

பௌத்த கலாசார மத்திய நிலையத்தின் அதிகாரிகள், ராவண பலகாய அமைப்பின் தலைவர் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரர் மற்றும் சிங்கலே அமைப்பைச் சேர்ந்த மடில்லே பஞ்ஞாலோக தேரர் ஆகியோர் அடங்கிய குழுவினரே இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் அங்கு சென்று ஆலயம் அமைந்துள்ள பகுதியைப் பார்வையிட்டமையோடு, பிள்ளையார் ஆலய பகுதியில் அமைக்கப்படுள்ள பௌத்த விகாரையைச் சேர்ந்த அமைப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கொழும்பில் இருக்கும் பௌத்த மதகுருமார்களைவிடவும் வடக்கு, கிழக்கில் வசிக்கும் மதகுருமார்கள் பல்வேறு இன்னல்களைச் சந்திக்கிறார்கள் எனவும், தமிழ் இனவாதிகளால் அவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகவும் அந்த நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கோடும் அவர்களுக்குரிய பாதுகாப்பை ஏற்படுத்தி பௌத்த மதத்தை வளர்க்கும் நோக் கோடும் தாம் இப்பகுதிக்கு விஜயம் செய்தனர் எனவும் ராவண பலய அமைப்பின் தலைவர் இத்தா கந்தே சத்தா திஸ்ஸ தேரர் இதன்போது தெரிவித்தார். (ஐ)



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

காலைக்கதிர் Kalaikathir



# 20 பேரை பூலான்தேவி குழு கொன்ற வழக்கில் தீர்ப்பு வெளியாகும் நாளில் ஆவணங்கள் மாயம்

கான்பூர்,ஜன.20

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பூலான்தேவி கும்பலால் 20 பேர் கொல்லப்பட்ட வழக்கில் தீர்ப்பு வெளியிடும் நாளில் வழக்கு ஆவணங்கள் மாயமா கின. இதனால் நீதிபதி வழக்கு விசாரணையை 24 ஆம் திகதிக்குத் தள்ளிவைத்தார்.

உத்தரபிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டம் பெஹ்மால்கிராமத்தில்1981ஆம்ஆண்டுகொள்ளைக் கும்பல் தலைவி பூலான்தேவி தனது ஆள்களுடன் சென்று தாகூர் சமுதாயத்தை சேர்ந்த 20 பேரைக் கொன்றார். பூலான்தேவியை தாகூர் சமுதாயத்தை சேர்ந்த இருவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி யமைக்குப் பழிவாங்குவதற்காக அவர் இந்தப் படு கொலைகளை நடத்தினார் எனக்கூறப்பட்டது.



இந்தப் படுகொலைச் சம்பவம் நாட்டையே உலுக் கியது. இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று அன்றைய உத்தரபிரதேச முதலமைச்சர் வி.பி.சிங் தனது பத வியை ராஜினாமாச் செய்தார்.

ஆரம்பத்தில் இந்த வழக்கில் பூலான்தேவி உள்பட 35 பேரின் பெயர்கள் சேர்க்கப்பட்டன. அதில் 8 பேர் பல்வேறு சம்பவங்களில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 3 பேர் தலைமறைவாகிவிட்டனர். இந்த சம்பவம் நடந்து 2 ஆண்டுகளுக்கு பின்னர் 1983 அம் ஆண்டு பூலான்தேவி மத்தியபிரதேச பொலிஸாரிடம் சரண் அடைந்தார்.

11 ஆண்டுகள் சிறையில் கழித்த அவர் 1994 ஆம் ஆண்டு விடுதலையானார். தன் மீதுள்ள வழக் குகளை எதிர்த்து சட்டப் போராட்டம் நடத்தி வந்தார். அதே சமயம் அரசியலில் இறங்கி எம்.பி. பதவியும் வகித்தார். 2001 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி டெல்லியில் அவரது வீட்டின் வெளியே ஒரு கும்பலால் கொல்லப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு கான்பூரில் உள்ள கொள்ளை சம்பவங்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக் கும் சிறப்பு நீதிமன்றில் பெஹ்மால் படுகொலை வழக்கில் உயிரோடு இருக்கும் 4 பேர் மீது குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டது. போசா, பிகா, விஸ் வநாத், ஷியாம்பாபு ஆகிய அந்த 4 பேரில் போசா மட் டும் சிறையில் உள்ளார். மற்ற 3 பேரும் பிணையில் உள்ளனர்.

இந்த வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சுதிர் குமார் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்குவதாக இருந் தார். நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கியதும், வழக்குத் தொடர்பான உண்மையான ஆவணங்கள் மாயமாகி இருக்கின்றமையை நீதிபதி அறிந்தார். இதனால் நீதிமன்ற ஊழியருக்குக் கண்டனம் தெரி வித்த நீதிபதி, வருகிற 24 ஆம் திகதி ஆவணங்களைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். வழக்கு விசாரணையை யும் அன்றைய திகதிக்கு ஒத்திவைத்தார்.

இது குறித்து அரச சட்டத்தரணி கூறும்போது, நீதிமன்ற ஆவணங்களைக் கண்டுபிடித்த பின் னரே தீர்ப்பு வெளியிடும் திகதியை நீதிபதி அறிவிப் பார் – என்றார்.

## மனைவியைக் காருக்குள் 2 நாள்களாகப் பூட்டி வைத்துவிட்டு மாயமான கணவர்!



இடுக்கி,ஜன.20

காருக்குள் இரு நாள்களாக மனைவியைப் பூட்டி வைத்துவிட்டு கணவர் மாயமான சம்பவம் கேரளாவில் நிகழ்ந்துள்ளது.

கேரள மாநிலம், அடிமாலி அருகே கல்லார்க்குட்டி பகுதியில் பெட்ரோல் நிரப்பும் நிலையம் ஒன்றுக்கு அருகில் ஒரு கார் 2 நாள்களச்சக் தரித்து நின்று கொண்டிருந்தது. இதனால் சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். பொலிஸார் சென்று பார்த்தபோது காரின் உள்ளே பெண் ஒருவர் இருந்தார்.

சோர்வாக இருந்த அவரை மீட்டு ஆஸ்பத்திரி யில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அந்த பெண்ணின் பெயர் லைலாமணி என்று தெரியவந்தது. பின்னர் அவரிடம் விசாரித்ததில் அவரும், கணவர் மேத் யூவும் வியாழக்கிழமை அங்கு வந்தனர் எனவும், காரைப் பூட்டிவிட்டு இயற்கை உபாதையை கழிக்கச் சென்ற கணவர் திரும்பி வரவில்லை எனவும் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அவர்களுக்குச் சொந்த ஊர் வயநாடு மாவட்டம் தலப்புழா. அங்கு இருந்த சொத்துகளை விற்று விட்டு வாடகை வீட்டில் வசித்து வந்து இருக்கிறார்கள். அவர்களின் மகன் திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். லைலாமணியிடம் விசாரிக்கும்போது முன்னுக்குப்பின் முரணாக பேசி வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவில் ஒரு லட்சத்து 34 ஆயிரம் பேர் 2018 இல் தற்கொலை செய்து கொண்டனராம்!

புதுடெல்லி, ஜன.20

இந்தியாவில் 2018 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 34ஆயிரம் பேர் தற் கொலை செய்துள்ளனர். விவசாயி களைவிட, வேலை இல்லாதவர்கள் தற்கொலை அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவண புள்ளிவிவரத்தில் தெரிய வந்துள்ளது.



இந்தியாவில் விவசாயிகள் தற் கொலைகள் அதிகரித்துவிட்டன எனப் பரவலாக ஒருபேச்சு உள்ளது. ஆனால் தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் அதற்கு மாறான தகவல் வெளியாகி உள்ளது. 2018 ஆம் ஆண்டில் நடை பெற்றுள்ள குற்றங்கள் தொடர்பான அந்த தகவலில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

ஒட்டுமொத்தமாக 2018ஆம் ஆண் டில் ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 516 பேர் தற்கொலை செய்துள்ளனர். இது 2017 ஆம் ஆண்டைவிட 3.6 சதவீதம் அதிகம்.

இதில் மராட்டிய மாநிலம் முதலிடத்தி லும் (17,972 பேர்), தமிழ்நாடு 2 ஆம் இடத்திலும் (13,896 பேர்), மேற்குவங் காளம் 3 ஆம் இடத்திலும் (13,225 பேர்), மத்தியபிரதேசம் 4 ஆம் இடத்தி லும் (11,775 பேர்), கர்நாடகம் 5 ஆம் இடத்திலும் (11,561 பேர்) உள்ளன. இந்த 5 மாநிலங்களிலேயே நாட்டின் பாதி தற்கொலைகள் (50.9 சதவீதம்) இடம்பெற்றுள்ளன.

2018 ஆம் ஆண்டு சராசரியாக தினமும் வேலை இல்லாதவர்கள் 35 பேரும், சுயதொழில் செய்வோர் 36 பேரும் தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொண்டுள்ளனர். அந்த ஆண்டில் வேலை இல்லாத வர்கள் 12,936 பேரும் (9.6 சத வீதம்), சுயதொழில் செய்வோர் 13,149 பேரும் (9.8 சதவீதம்) தற்கொலை செய்துள்ளனர்.

விவசாய துறையில் 10,349 பேர் (7.7 சதவீதம்) தற்கொலை செய்துள்ளனர். இதில் 5,763 பேர் விவசாயிகள், 4,586 பேர் விவசாய தொழிலாளர்கள். தற் கொலை செய்த விவசாயிகளில் பெண்கள் 306 பேர், விவசாய தொழிலாளர்களில் பெண்கள் 515 பேர்.

தற்கொலை செய்த பெண்கள் 42,391. இதில் 22,937 பேர் (54.1 சதவீதம்) குடும்பத் தலைவிகள். அரசு ஊழியர்கள் 1,707 பேர் (1.3 சதவீதம்), தனியார் நிறுவன ஊழியர்கள் 8,246 பேர் (6.1 சதவீதம்), பொதுத்துறை ஊழியர்கள் 2,022 பேர் (1.5 சதவீதம்), மாணவர்கள் 10,159 பேர் (7.6 சதவீதம்) தற்கொலை செய்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து மருத்துவ நிபுணர்கள் கூறும்போது, தற்கொலைகள் தீவிரமா னமை பொது சுகாதார பிரச்சினை. ஆனால் இவை சரியான நேரத்தில் சாட்சிகள் அடிப்படையிலும், குறைந்த பட்ச தலையீடுகள் மூலமும் தடுக்கப் படக் கூடியவைதான் என்றனர்

# மரண அறிவித்தல்

அமரர்

## திருமதி குலமணி இலங்கராஜா

தோற்றம் 10 04 1924



மறைவு 18 01 2020

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலமணி இலங்கராஜா அவர்கள் சனிக்கிழமை (18.01.2020) அன்று கொழும்பில் காலமானார். அன்னார் சிவசம்பு, அன்னம் தம்பதியரின் மூத்த புதல்வியும், அமரர் சி.கே. இலங்கராஜா (ஓவசியர்) அவர்களின் மனைவியும், ராஜினி, நிரஞ்சினி, ரவிராஜ், ஜெயராஜ், அமரர் தர்சினி ஆகியோரது தாயாரும், சிவானந்தன், சந்திரசிவம், மேனகா, குமாரதாசன் ஆகியோரது மாமியாரும், மயூரன், ரேணுகா, கௌரிசங்கர், சுரேன், சுரேஷ், சாம்பவி, பிரசன்னா ஆகியோரது பாட்டியும், அர்ஜுன், சந்தோஷ், ரோபியா, அமலா, அம்புஜா ஆகியோரது பூட்டியும், அமரர் சபாரட்ணம், அமரர் தனபாலசிங்கம், அமரர் குணரட்ணம், நவரட்ணம், ராஜரட்ணம், செல்வரட்ணம், அமரர் நல்லம்மா, கண்மணி, அமரர் நேசமணி ஆகியோரது சகோதரியு மாவார். அன்னாரது பூதவுடல் இன்று 20.01.2020 திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ் சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 1.00 மணிக்கு கல்கிசை இந்து மயா னத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்: இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்)
இல. 12, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு 06.

## மரண தண்டனைக்கு ஜப்பானில் எண்பது சதவீத மக்கள் ஆதரவு!




டோக்கியோ,ஜன.20

மரண தண்டனைக்கு ஜப்பானில் 80 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் கடும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஜப்பான் நாட்டில் மரண தண்டனைக்கு எதிராக குரல் எழுந்தது. இதையடுத்து மரண தண்டனை தொடர்பாக மக்களிடம் கருத்து கணிப்பு எடுக்கப்பட்டது.

அதில், 80 சதவீத மக்கள் மரண தண்டனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என ஜப்பான் அரசு நேற்று அறிவித்தது. அதன்படி, 9 சதவீத மக்கள் மட்டுமே மரண தண்டனை நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்து இருந்தனர். 80.8 சதவீத மக்கள் அதைத் தொடர வேண்டும் என்றே கூறியுள்ளனர்.

மரண தண்டனையை ஆதரிக்கும் 57 சதவீதத்தினர், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உணர்ச்சிகளைக் குணப்படுத்த வேண்டியது அவசியம். அதற்காக மரண தண்டனை விதிக்கப்படுவது சரியே என்று பதிலளித்துள்ளனர்.

54 சதவீதத்தினர் மரண தண்டனையை சில வகையான குற்றங்களுக்கு பதிலடி என்று கூறியுள்ளனர்.

மேலும் பதிலளித்தவர்களில் 58 சதவீதத்துக்கும் அதிகமானோர் மரண தண்டனையை ஒழிப்பதால், கடுமையான குற்றங்கள் அதிகரிக்கும் என்று தெரிவித்தனர்.

## 250 கிலோ எடை கொண்ட பயங்கரவாதி ஈராக்கில் பாதுகாப்புப் படையினரால் கைது!

மொசூல்,ஜன.20

ஈராக்கில் 250 கிலோ எடை கொண்ட ஐ.எஸ். பயங்கரவாதியை பாதுகாப்பு படையினர் கைது செய்தனர் என அறிவிக்கப்படுகின்றது

ஈராக் நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு கடந்த சில வருடங்களாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

அவர்களை ஒடுக்குவதற்காக அமெரிக்க கூட்டுப்படைகள் அங்கு முகாமிட்டு உள்ளன. இவர்கள் அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான்வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனினும் இந்த தாக்குதலில் பொதுமக்களில் பலர் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்தும் உள்ளனர்.



ஈராக்கில் செயல்பட்டு வரும் ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவராக முப்தி அபு அப்துல் பாரி என்பவர் செயல்பட்டு வந்துள்ளார்.

ஏறக்குறைய 250 கிலோ (560 பவுண்டுகள்) உடல் எடை கொண்ட அவர் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியும் வந்துள்ளார்.

அவரை ஈராக்கிய பாதுகாப்பு படையை சேர்ந்த ஸ்வாட் குழு மொசூல் நகரில் வைத்து கைது செய்தது. ஆனால் கைது செய்யப்பட்ட முப்தியைக் காரில் ஏற்ற முடியவில்லை. அதிக உடல் எடையுடன் குண்டாக இருந்த முப்தியை காருக்குள் ஏற்ற மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்த நிலையில், லாரி ஒன்றில் அவரை ஏற்றி கொண்டு சென்றனர்.

ஐ.எஸ். அமைப்பினருக்கு விசுவாசமுடன் செயல்படாத இஸ்லாமிய மதபோதகர்களை கொல்வதற்கான உத்தரவுகளையும் (புத்வா) முப்தி பிறப்பித்து உள்ளார் என ஈராக்கிய பொலிஸார் வெளியிட்டு உள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## சிக்காகோவில் பனிப்புயலால் 850 விமான சேவைகள் ரத்து

சிக்காகோ,ஜன.20

பனிப்புயலால் சிக்காகோவில் 850 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. இந்த



குளிரால் அங்குள்ள மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் அங்கு வீசும் பனிப்புயல் காரணமாக சிக்காகோ விமான நிலையங்களில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

இது தொடர்பாக விமானத்துறை டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளவை வருமாறும்: –

சிக்காகோவில் குளிர்கால வானிலை காரணமாக, விமான நிறுவனங்கள் 850 இற்கும் மேற்பட்ட விமானங்களை ரத்து செய்துள்ளன.

தி ஒஹேர் சர்வதேச விமான நிலையத்தில் 686 விமானங்களும், மிட்வே சர்வதேச விமான நிலையத்தில் 169 விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. பனிப்பொழிவு காரணமாக சுமார் 470 விமானங்கள் தாமதமாகிவிட்டன. மேலும் ஒஹேர் விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. – இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஏமனில் இராணுவக் குடியிருப்புகள் மீதான ஏவுகணைத் தாக்குதலில் 24 வீரர்கள் பலி!

*கெய்ரோ,ஜன.20*

*ஏமன் நாட்டில் இராணுவக் குடியிருப்புகள் மீது நடந்த ஏவுகணை தாக்குதலில் 24 வீரர்கள் பலியாகினர்.*

*ஏமன் நாட்டின் வடகிழக்கில் மாரீப் மாகாணத்தின் அல் - மிலா பகுதியில் இராணுவக் குடியிருப்புகள் மீது கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் வகையை சேர்ந்த ஏவுகணை ஒன்று தாக்குதல் நடத்தியது.*



*இதில் 24 வீரர்கள் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்திற்கு ஹவுதி கிளர்ச் சியாளர்கள் பொறுப்பேற்கவில்லை. ஏமனில் அதிபர் மன்சூர் ஹாடி தலைமையிலான அரசுக்கு எதிராக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பல வருடங்களாக தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச்சில் இருந்து ஹாடி வேண்டுகோளுக்கு ஏற்ப சவுதி தலைமையிலான கூட்டணி படையினர் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில், பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டு உள்ளனர்.*

## 'இளவரசர்', 'இளவரசி' என்ற அரச பட்டத்தை ஹரி தம்பதியர் இனிப் பயன்படுத்த மாட்டார்கள்



இங்கிலாந்து அரசகுடும்பத்தில் இருந்து விலகியுள்ள ஹரி தம்பதி இனி இளவரசர், இளவரசி என்ற அரச பட்டத்தை பயன்படுத்த மாட்டார்கள் என பங்கிங்காம் அரண்மனை தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி அரசப் பதவிகளை துறந்து பொருளாதார ரீதியில் சுதந்திரமாக செயல்பட போகின்றனர் என ஹரி தம்பதி அறிவித்தனர். அதை இங்கிலாந்து ராணி 2 ஆம் எலிசபெத் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் பங்கிங்காம் அரண்மனைதரப்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் ஹரி தம்பதி இனி அரசக்கடமைகளுக்கான பொது நிதியை பெறமாட்டார்கள் என்றும் அவர்களின் செயல்கள் இங்கிலாந்து ராணியை நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறைகள் அனைத்தும் இந்தாண்டு வசந்த காலத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் நைஜீரியக் கிராமத்தில் 14 பேர் மரணம்

அபுஜா,ஜன.20


நைஜீரியாவில் கிராமத்துக்குள் புகுந்த பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சிக்கி 14 பேர் பலியாயினர்.

நைஜீரிய நாட்டின் ஜம்பாரா மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்திற்குள் ஆயுதம் ஏந்திய கும்பல் புகுந்தது. சுமார் 40 மோட்டார் சைக்கிளில் வந்த அவர்கள் கிராமத்தில் இருந்த வீடுகளுக்குள் நுழைந்து அங்கிருந்த பணம் மற்றும் பொருள்களைக் கொள்ளையடித்தனர்.

மேலும் வீட்டை விட்டு வெளியேற கூடாது என்று கூறியவாறு, மக்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். உயிருக்கு பயந்து பலர் அலறி அடித்துக்கொண்டு ஓடினர். ஆனால் அந்த கும்பல் அவர்களை விடாமல் துரத்திக் கண் மூடித்தனமான தாக்குதலை நடத்தியது. இதில் அப்பாவி பொதுமக்கள் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் பல ஆண்டுகளாக அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே இதுபோன்ற ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகளும் அவ்வப்போது தாக்குதல் நடத்துவது அங்குள்ள மக்களை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.







பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

# நாசம்!

## இந்த மாசு உலகம்

(நேற்றைய தொடர்ச்சி)

வணங்க ஆளில்லாத ஆலயங்களில் எல்லாம் இரவு பகலாக ஒலிபெருக்கிகள் உச்சத்தில் ஒலிக்கின்றன. சத்தம் ஏற்படுத்தும் தாக்கம் மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்கினங்களினதும் பறவைகளினதும் வாழ்வியலில் ஒருவிதமான அமைதியின்மையையே தோற்றுவிக்கிறது. ஒலிமாசு பற்றிய விழிப்புணர்வு அண்மைக் காலமாகவே அதிகம் பேசப்படுகின்றது.

இன்று திருமண நிகழ்வுகளில் உச்சத்தில் பாடல்



கள் ஒலிக்க விடப்படுகின்றன. அதிர்வு வாகனப் பாதுகாப்பு சைரன்களை உசுப்பி விடுமளவிற்கு எல்லை மீறுகிறது.

பண்டிகைகளின் நோக்கம் அறியாது நாங்கள் கொண்டாடுகிறோம். வெடியோசை காதைப் பிளக்கிறது. இதனால் தேவையற்ற இரசாயனங்கள் காற்றினிலும் மண்ணிலும் கலக்கின்றன. இத்தகைய கட்டுப்பாடற்ற துர்ப்பாக்கிய நிலை மரண வீடுகளையும் இன்று விட்டு வைக்க வில்லை. சோகமோ மகிழ்ச்சியோ சத்தம் உச்சத்தில் இருக்க வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு தவறானது.

வாகனங்களின் ஹோண் ஒலி இரவிலும் ஓய்வதில்லை. இது நகர வாழ்க்கையில் பெரிய தலைவலியாக மாறி வருகிறது.

விமான நிலையங்களை நெருங்கி தாழப் பறந்து வரும் விமானங்களின் பேரொலி அதிர்வுகள், அவை மூச்சுப்பிடித்து முக்கி வானில் கிளம்பும் போது ஊதித் தள்ளும் எரிபொருள் மீதிகள் மற்றும் காபன், ரயில்களின் ஒலி மற்றும் அதிர்வுகள் புகை என்றெல்லாம் நகரங்களை நாசமாக்கி வருகின்றன.

பெரு நகரங்கள் இரவு முழுவதும் உறங்காது விழித்திருக்கின்றன. ஒளி வெள்ளம் கண்களை கூச வைக்கிறது. அங்கு வாழும் அற்ப சொற்ப பறவையினங்கள் இதனால் இடைஞ்சலையே எதிர்நோக்குகின்றன. மாலை ஐந்து மணிக்கே ஓய்வினை விரும்பும் பறவைகள் இரவு முழுவதையும் இருளில் கழிப்பதிலேயே நாட்டம் கொள்கின்றன. அந்த இயற்கையை மனிதன் கெடுக்கிறான்.

அதிகாலையில் பறவைகள் துயிலெழுந்து விடும் பொழுதுதான், விவசாயி வயலில் கால் பதிக்கும் பொழுதில்தான், இன்றைய மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கத்திற்கு நேரம் கிடைக்கிறது.

வண்டுகள், பூச்சி இனங்கள், விலங்கினங்கள், பறவைகள், தாவர இனங்கள், விதைகள் தப்பிக்க போதுமான அவகாசம் கொடுத்துக் காலம், இடம் அறிந்து படிப்பறிவற்ற ஆதிவாசிகள் காடுகளில் மூட்டும் மென் தீ இயற்கைச் சமநிலையே பேணி வந்தது. அதன் இரகசியத்தை,அந்த நுட்பத்தைவிஞ்ஞானஉலகம்இன்றும் ஏன் கற்க மறுக்கின்றது?

அந்தக் கால ‘அண்ணை றைற்’ வானொலி நாடகத்தில் **‘அச்சுவேலி, ஆவரங்கால், நீர்வேலி வாழைக் குலையெல்லாம் பழுக்கிறது எங்கட வசு விடுகிற புகையிலை’** என்று ஒரு வசனம் வருகிறது. அந்த நகைச் சுவையில் எவ்வளவு ஆழமான அர்த்தம் பொதிந்து கிடக்கிறது?

மின் காந்த அலைகள் கண்களுக்கு புலப்படாது மக்களைச் சூழ ஆபத்தானவையாக உலா வருகின்றன. சூரியனிலிருந்து பல வகைக் கதிர்களும் இயல்பாக வெளிப்பட்டாலும் இயற்கை அதனைச் சமாளிக்க வல்லது.

ஒளி மாசு பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடலாம். சூரியனை வெற்றுக் கண்களால் பார்க்க முடியாது. அது ஆபத்தானது. எனவேதான் சூரியனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடுகள் கூட உதய காலத்தில் மேற்கொள்ளப் படுகின்றன. கிரகண காலங்கள் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணிக்கப்பட்டன. அப்போதே மக்கள் விகாரமான ஒளி முறிவுகளில் இருந்து தங்களை காக்க வெளிப் படாது, ஒரு கட்டுப்பாடாக, உண்ணாது, பருகாது, வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தமை அர்த்தம் உள்ளதாகத் தெரிகின்றது. இதனை எல்லாம் மூட நம்பிக்கை



என்று ஒதுக்கி விட முடியாது.

தேவையற்றமின்குமிழ்களைநிறுத்திமின்சாரத்தை சேமியுங்கள் என்று மின்சார சபை கூறுவது ஒருபுறம். அவசியமற்ற ஒளி உடல், உள ஆரோக்கியத்திற்கு உகந்த தல்ல என்பது மறுபுறம். ஏனோ சப்பறம் போல பல மின் விளக்குகள் ஆளரவமற்ற வழிபாட்டு இடங்களில் இரவிரவாக ஒளிரு கின்றன. பல வர்ண மின் அலங்காரங்கள் பெரு நகரங்களில் வீதிச் சமிக்ஜைகளைப் பின்தள்ளி விடுகின்றன.

முன்பெல்லாம் வீடுகளை சுத்தமான காற்றும் சூரிய ஒளியும் புகும் வகையில் ஆரோக்கியம் கருதி அமைத்து வாழ்ந்தார்கள். இன்றுநுளம்பு, தூசி என்று வெளி நாடுகளைப் போல அடைத்து மூடி வீடுகளைக் கட்டி பகலிலும் மின் குமிழ்களை ஒளிர விடவேண்டிய நிலமைக்கு வந்து விட்டோம்.

வீடுகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் அறைகளுக்கான குளிரூட்டிகளும் பெருமளவில் வெப்பத்தை வெளிவிடுவது ஆபத்தானது. இவற்றுக்கு பயன்படுத்தப்படும் வாயுக்கள் கசிதல் அடுத்த பிரச்சினையாக உருவெடுக்கிறது.

எங்கள் இளமைக் காலங்களில் ரெப்பிங் பைகள் கிடையாது. லஞ்ச் பேப்பர் தெரியாது. இவ்வளவு தூரம் பிளாஸ்டிக் பாவனை கிடையாது. இன்று அவை இல்லாமல் வாழ முடியாது.

பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் கொங்கிரீட் பிரிந்து அழிய மாட்டாதவை. எனவே உற்பத்தி செய்தபின் பல காலம் தாக்குப்பிடித்து நிலைத்து நிற்கும். உலகம் இத்தகைய பொருக்களால் நிரம்பி வழிகிறது. குப்பைமேடு சரிந்து மக்கள் இறந்து இருக்கிறார்கள்.

பொலித்தீன் கால்வாய்களில் அடைப்பினை ஏற்படுத்தி, இயற்கை நீரோட்டத்தை தடுத்து, வெள்ளப் பெருக்கு ஏற்படுவது வழக்கமாகி விட்டது. நகர்ப்புற கழிவு கால்வாய்களிலும் இது அடைப்பினை ஏற்படுத்தி வருகிறது.

ஆரோக்கியம் பற்றி அக்கறையாக இயங்கும் வைத்தியசாலைக் கழிவுகள் கூட ஆபத்தான பல பதார்த்தங்களை கொண்டிருக்கும் துர்ப்பாக்கிய நிலையில் அவை முறையாகக் கழிவகற்றல் செய்யப் படுவதில்லை.

தனி மனிதனாக அல்லது தமது குடும்ப மற்றும் கிராமிய மட்டங்களில் அமைப்புக்கள் ஊடாக அவரவர் சில சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். சில சுய கட்டுப்பாடுகளை கொண்டிருப்பது அவரவர் கடப்பாடு ஆகின்றது.

(தொடரும்)



# 18 கிலோகிராம் கேரளக் கஞ்சா மருதங்கேணியில் மாட்டியது!



யாழ்ப்பாணம், ஜன. 20

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் வீடொன்றில் பதுக்கி வைத்திருந்த 18 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக மது வரித் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் வீட்டைச் சுற்றிவளைத்தனர்.

இதன்போது வீட்டிலிருந்த 18 கிலோ கிராம் எடையுடைய கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அந்த வீட்டில் இருந்த சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

மீட்ப்பட்ட 18 கிலோ கஞ்சாவை இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ஐ – 07)

## சுகாதார விதிமுறையை பேணத் தவறி ஜூஸ் விநியோகத்த தயாரிப்பாளருக்குத் தண்டம்



யாழ்ப்பாணம், ஜன. 20

உரிய சுகாதார விதிமுறைகளை பேணத் தவறிய ஜூஸ் உற்பத்தியாளருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை நகர் பகுதியில் அனுமதியற்ற விதத்தில் உரிய வெப்ப நிலையின்றி மூடிய வடி ரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 400 ஜூஸ் பைக்கெற்றுக்களை ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.ஜெயகதாசன் மற்றும் காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம. ஜெயதீப் ஆகியோர் இணைந்து கைப்பற்றியிருந்தனர்.

அவற்றை நீதிமன்றில் ஒப்படைத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரிமையாளர் மன்றில் சமுகம் அளிக்காத காரணத்தால் மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

மன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையின் பிரகாரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட உரிமையாளர் கடந்த 16 ஆம் திகதி மன்றில் முற்படுத்தப்பட்ட வேளை அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து மன்றினால் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் அவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ)

## மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு மூவர் காயம்

வவுனியா, ஜன. 20

வவுனியா ரயில் நிலைய வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் உட்பட மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியா, குருமன்காடு பகுதியிலிருந்து ரயில் நிலைய வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வைரவப்புளியங்குளம் பகுதியில் குறுக்கு ஒழுங்கை ஒன்றுக்குத் திரும்ப முற்பட்ட சமயத்தில் அதே பாதை யில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களும், ஒரு சிறுவனும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் 1990 அவசர அன்புலன்ஸ் சேவை மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






## வவுனியா வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம்







வவுனியா, ஜன. 20

வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதான பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

டெங்கு அற்ற பிரதேசமாக எமது பகுதியை வைத்திருப்போம் எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சமூகத்தினரினால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்றிட்டத்தில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினர் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்திருந்தனர்.

வைத்தியசாலை வளாகம், வாகனத் தரிப்பிடம், விடுதிகள் போன்றவற்றை சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை மேற்கொண்டமையுடன் வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள், துப்பரவு பணியாளர்கள் மற்றும் வவுனியா பொலிஸார், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர் கள் இணைந்து இந்த சிரமதானப்பணியினை முன்னெடுத்திருந்தனர். (ஐ – 100)

## ஜெனீவாவுக்கான தூதராக பிரபல ஊடகவியலாளர்?

கொழும்பு, ஜன. 2

ஜெனீவாவிற்கான புதிய இலங்கைத் தூதுவராக பிரபல ஊடகவியலாளர் சி.ஏ.சந்திரபிரேமா நியமிக்கப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், பல தூதுவர்கள் மற்றும் பிற இராஜதந்திரிகள் நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே வெற்றிடமாக இருக்கும் ஜெனீவா, ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாளரும் எழுத்தாளருமான சந்திர பிரேமா ஜெனீவாவுக்கும், பேராதனை பல்கலைக்கழகத்தின் அறுவைச் சிகிச்சைப் பேராசிரியர் எம்.டி.லமவன்ச ரஷ்யாவுக்கான புதிய தூதராகவும் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை ஜேர்மனிக்கான புதிய தூதராக மனோரி உனம்புவா நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் 43 ஆவது கூட்டத் தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் புதிய தூதுவர் நியமிக்கப்படவுள்ளமை

(ஐ)

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# கண்காட்சிப் போட்டியில் அதிரடி காட்டிய மஹேல!

நியூசிலாந்தின் முன்னாள் தேசிய விளையாட்டு வீரர்களை உள்ளடக்கிய கண்காட்சி ரி-20 போட்டியில் 'கிரிக்கெட் அணி' வெற்றி பெற்றுள்ளது.

நடுவரின் தவறு காரணமாக இலங்கையின் கிரிக்கெட் ஜாம்பவான் மஹேல ஜெயவர்த்தன அங்கம் வகித்த ரக்பி அணி 3 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவி உள்ளது.

நியூசிலாந்தின் முன்னாள் கிரிக்கெட், ரக்பி வீரர்களை உள்ளடக்கிய இந்த ரி-20 போட்டியில், ரக்பி அணி சார்பாக இலங்கையின் ஜாம்பவான் வீரர்களான முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன மற்றும் சுழல்பந்து நட்சத்திரம் முத்தையா முரளிதரன் ஆகியோர் சிறப்பு பங்கேற்பாளர்களாக கலந்து கொண்டனர்.

நேபியர் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீபன் பிளமிங் கிரிக்கெட் அணி வழிநடத்தினார்.

முன்னாள் முன்னணி வீரர்களான டேனியல் விக்டோரி, நதன் அஸ்டில், ஜகப் ஓரம் உள்ளிட்ட பலர் அந்த அணியில் அங்கம் வகித்தனர்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிரிக்கெட் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 117 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சின்கிளேர் 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில், பர்ரெட் 02 விக்கெட்டுக்களையும், டக், ஸ்பைஸ், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 118 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ரக்பி அணி மஹேலவின் அதிரடியுடன் ஓட்ட இலக்கை அண்மித்த போதும், வெற்றி பெற முடியவில்லை.

இறுதிஓவரில் 15 ஓட்டங்கள் பெறவேண்டி இருந்த போது, முதலிரண்டு பந்துகளில் மஹேல 10 ஓட்டங்களையும், 4ஆவது பந்தில் 02 ஓட்டத்தினையும் பெற்றார்.

ஐந்தாவது பந்து முறையற்றதாக இருந்தபோதும், கள நடுவர் அதனை வழங்கவில்லை. இறுதிப்பந்தில் 03 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், உயர அடித்த பந்து பிடியெடுக்கப்பட்டது. இதனால் மஹேல 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



கிரிக்கெட் அணி 02 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது. (ஐ)

# பங்களாதேஷ் அணி அறிவிப்பு!

பாகிஸ்தான் அணிக்கெதிரான ரி - 20 தொடரில் விளையாடும், மாற்றம் கலந்த பங்களாதேஷ் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மொஹமதுல்லா தலைமையிலான 15 பேர் கொண்ட அணியில், முன்னணி துடுப்பாட்ட வீரரான டமீம் இக்பால் அணியில் இணைந்துள்ளார்.

இலங்கை மண்ணில் நடைபெற்ற ரி - 20 தொடரில் டமீம் இக்பால் தலைமையிலான பங்களாதேஷ் அணி, முழுமையாக தொடரை இழந்தது. இதனால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.


இதன்பிறகு எந்தவித தொடரிலும் பங்கேற்காத டமீம் இக்பால், நீண்டதொரு இடைவெளிக்கு பிறகு அணியில் இணைந்துள்ளார்.

மேலும், 20 வயதான வலக்கை மித வேகப்பந்துவீச்சாளர் ஹசன் மொஹமட், இந்தப் போட்டியின் ஊடாக சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை பெறுகிறார்.

இதுதவிர, வலக்கை வேகப்பந்து வீச்சாளரான ருபெல் ஹொசைனும், அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

மொஹமதுல்லா தலைமையிலான அணியில், டமீம் இக்பால், சௌமியா சர்கார், மொஹமட் நய்ம், நஜ்முல் ஹொசைன், லிடொன் தாஸ், மொஹமட் மிதுன், அபீப் ஹொசைன், மெயிடி ஹசன், அமினுல் இஸ்லாம், முஷ்டபிசுர் ரஹ்மான், சயீப் புல் இஸ்லாம், அல் அமீன் ஹொசைன், ருபெல் ஹொசைன், ஹசன் மொஹமத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.






# பாகிஸ்தான் மண்ணில் விளையாட பங்களாதேஷ் முன்னணி வீரர் மறுப்பு

பாகிஸ்தானுக்கு பங்களாதேஷ் அணி, கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அங்கு சென்று விளையாட அணியின் முன்னணி வீரரொருவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரும், விக்கெட் காப்பாளருமான முஷ்பிகுர் ரஷீம், பாகிஸ்தான் மண்ணில் விளையாடுவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர்பிலான உத்தியோகபூர்வ கடிதமொன்றை அவர் வழங்கவில்லை என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதம் கிடைத்தவுடன் அவரை இந்தத் தொடரில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முன்னணி சகலதுறை வீரரான சகிப் ஹல் ஹசனுக்கு இரண்டு வருட போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், முஷ்பிகுர் ரஷிமின் இந்த திடீர் முடிவு பங்களாதேஷ் அணிக்கு கடும் பின்னடைவை கொடுத்துள்ளது.

இந்த மாத இறுதியில் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர், ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்றது.

எனினும், இரு அணிகளும் ஒரேயொரு டெஸ்ட் போட்டியிலும், ஒரேயொரு ஒருநாள் போட்டியிலும் ஏப்ரல் மாதம் விளையாடுகின்றன.

இந்தச்சுற்றுப்பயணத்தின்போது, முதலாவதாக நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 24ஆம் திகதி லாகூர் மைதானத்தில் நடைபெறுகின்றது.

இரண்டாவது ரி-20 போட்டி 25ஆம் திகதியும், மூன்றாவது ரி -20 போட்டி 27ஆம் திகதியும், லாகூர் மைதானத்தில் நடைபெறுகின்றன. முதலாவது டெஸ்ட் போட்டி, பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ராவல்பிண்டி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதன்பிறகு ஒரேயொரு ஒருநாள் போட்டி, ஏப்ரல் மாதம் 3ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியும் கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இந்திய அணி விவரம் விரைவில்!

பெங்களூரு, ஜன்.20

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டி தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி ஓரிரு நாளில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி, இந்த மாதம் முதல் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து 20 ஓவர், 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டியில் விளையாட இருக்கிறது. நியூசிலாந்து தொடருக்கான இந்திய 20 ஓவர் கிரிக்கெட் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

20 ஓவர் போட்டி தொடர் ஆக்லாந்தில் வருகிற 24 ஆம் திகதியும், ஒருநாள் போட்டி தொடர் ஹாமில்டனில் பெப்ரவரி 5 ஆம் திகதியும், டெஸ்ட் போட்டி தொடர் வெலிங்டனில் பெப்ரவரி 21 ஆம் திகதியும் தொடங்குகின்றன.

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டி தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி தேர்வு பெங்களூருவில் நேற்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஹார்திக் பாண்ட்யாவின் உடல் தகுதி அறிக்கை கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக இந்த அணி தேர்வு இன்னும் ஓரிரு நாளில் நடைபெறும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.



# சம்பியன் பட்டத்தை வென்றார் ஆஷ்லே பார்டி

அடிலெய்ட் சர்வதேச ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்திற்கான இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டியும், உக்ரைனின் டயானா யஸ்த்ரெம்ஸ்காவும் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களின் கரகோத்துக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில். முதல் செட்டை ஆஷ்லே பார்டி, 6 – 2 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், ஆஷ்லே பார்டிக்கு டயானா யஸ்த்ரெம்ஸ்கா கடும் நெருக்கடி கொடுத்தார்.

எனினும், அந்த நெருக்கடிகளை திறம்படச் சமாளித்த ஆஷ்லே பார்டி, செற்றை 7 – 5 என போராடி கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார். (ஐ)

# நன்னடத்தைச் சோதனை அடிப்படையில் அகதிகளை ஆஸி. நாடு கடத்தவே முடியாது

## தமிழ் அகதியின் வழக்கில் புதிய திருப்பம்

கான்பரா, ஜன. 20

ஆஸ்திரேலியாவில் குற்றம் புரியும் அகதிகளை நன்னடத்தைச் சோதனையின் அடிப்படையில் நாடுகடத்தும் சட்டம் 'அகதிகளுக்கு பொருந்தாது' என ஆஸ்திரேலிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம், நன்னடத்தை சோதனையின் மூலம் ஆஸ்திரேலிய அரசால் விசா மறுக்கப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட அகதிகள், அரசின் முடிவுக்கு சட்டரீதியாக சவால் விடுக்கக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

2014ஆம் ஆண்டு நன்னடத்தைச் சோதனை என்ற அளவுகோல் வலுப்படுத்தப்பட்டது முதல், அகதிகள் உள்ளிட்ட ஆஸ்திரேலியக் குடியுரிமை அல்லாதவர்களுக்கு இந்தச் சோதனையின் அடிப்படையில் விசா மறுப்பது அல்லது ரத்துச் செய்வதை அதிகரித்து வந்தது ஆஸ்திரேலிய அரசு.

இந்த நிலையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு தமிழ் அகதியின் வழக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. இதில், குணநலன் தொடர்பிலான இடப்பெயர்வு சட்டத்தின் 501 பிரிவு அகதிகளுக்கு பொருந்தாது எனத் தீர்ப்பளித்திருக்கிறார் நீதிபதி ஸ்டீவன் ரரேஸ்.

இடப்பெயர்வு சட்டத்தின் 501 பிரிவின் படி, 12 மாதங்கள் அல்லது அதற்கு மேலும் சிறைத்தண்டனை பெறும் ஒரு வெளிநாட்டினரின் விசா தானாக ரத்தாகி, அவர் நாடு கடத்தப்படுவார்.

தமிழ் அகதியின் சார்பாக ஆஜராகியிருந்த 'அனைவருக்குமான மனித உரிமைகள்' அமைப்பின் ஆலிசன் பட்டிசன், இது 'வியக்கத்தக்க தீர்ப்பு' எனக் கூறியிருக்கிறார்.

இத்தீர்ப்பு ஆயிரக்கணக்கான அகதிகள் விடயத்தில் தாக்கத்தை செலுத்தும், என ஆஸ்திரேலிய ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.

ஜுலை 2019 முதல் ஜுன் 2019 வரையிலான காலக்கட்டத்தில், நன்னடத்தையின் அடிப்படையில் 943 விசாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஒக்ரோபர் 2019 இன் கணக்குப்படி, நன்னடத்தை சோதனையின் தோல்வியடைந்த சுமார் 600 வெளிநாட்டினர் குடிவரவுத்துறை தடுப்பு மையங்களில் வைக்கப்பட்டுள்ளனர். அதே சமயம், இதில் எத்தனை பேர் அகதிகள் உள்ளனர் என்ற விவரத்தை ஆஸ்திரேலிய உள்துறை வெளியிட மறுக்கிறது.

குற்றம் புரியும் அகதிகளை ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றிவோம் எனக் கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் சவால் விடுத்திருந்த நிலையில், இத்தீர்ப்பு ஆளும் தரப்புக்கு ஒரு பின்னடைவாகவே கருதப்படுகின்றது.

# 7 விடயங்களுக்கு மாகாண சபைகள் முன்னுரிமை வழங்குவது அவசியம்

## ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு

கொழும்பு, ஜன. 20

ஏழுமுக்கியவிடயங்களுக்கு மாகாண சபைகள் முன்னுரிமை வழங்கவேண்டும் என ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷ சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்த விரிவான பணிப்புரைகள் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந் தரவுக்கு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய பாடசாலைகள், வைத்தியசாலைகள், வாராந்தர சந்தை, பஸ் நிலையங்கள், வீதி சுத்திகரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கழிவுபொருள் முகாமைத்துவம் என்பன சிறந்த முறையில் தொழிற்படுவது குறித்து முன்னுரிமை முறையில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களுக்கு ஜனவரி முதல் மார்ச் மாத காலப் பகுதியினுள் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.



அத்தோடு, இந்த ஏழு விடயங்களின் மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகள் உடன் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விடயங்களும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியின் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தலில் வெல்லக்கூடிய தலைவர் எம்மிடமுள்ளார்

## கூறுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜன. 20

எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய தலைவர் எம்மிடம் உள்ளார். எனவே நாம் நிச்சயம் வெற்றியடைவோம் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பொரளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. எமக்குப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. நேரத்தை வீணடிக்க முடியாது.

நாம் பெருமையடைகிறோம். எம்மிடம் வெற்றி பெறக்கூடிய ஒரு தலைவர் இருக்கிறார். இவரைக் கொண்டு நிச்சயமாக நாம் இந்தத் தேர்தலில் வெற்றியடைவோம் – என்றார்.

இதேவேளை, இங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, இங்குள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பலமான கூட்டணியொன்றை அமைத்து, அடுத்த பொதுத் தேர்தலில் களமிறங்கத் தீர்மானித்துள்ளோம்.

இந்தப் பொதுத் தேர்தலில் பலமான ஜனநாயகக்கூட்டணியொன்றுஉருவாகும். இந்தக் கூட்டணியின் தலைவராக நிச்சயமாக சஜித் பிரேமதாசதான் செயற்படுவார் – என்றார். (ஐ)




# தமிழ்க்கூட்டமைப்பு ஏற்பாட்டில் மட்டக்களப்பில் பொங்கல் விழா









மட்டக்களப்பு, ஜன. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொங்கல் விழா நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பொங்கல் விழா, மண்முனை தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் பட்டிப்பளை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, வரவேற்பு நடனம், அதிதிகள் உரை, கிராமிய நடனம், பட்டிமன்றம், வசந்தன் கூத்து போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றன.

பொங்கல் விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன், எஸ்.யோகேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கே.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் ஸ்ரீ.சரவணபவன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ப.அரியநேத்திரன் மற்றும் தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்ய அரசு முயற்சி

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 20

சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்து அரசைத் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் நோக்கில்தான் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொரளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமக்கு வெற்றி பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. நாம் நிச்சயமாக இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பலமானதொரு கூட்டணியை நாம் ஸ்தாபிப்போம்.

இந்தக் கூட்டணியில் களமிறங்கி, மீண்டும் தேர்தலில் வெற்றியடைவோம். இதற்காக நாம் தயாராகிவிட்டோம்.

புதிய நபர்களுடன் பயணத்தை தொடர வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும். நாம் பதவிகளுக்காக என்றும் கவலையடைந்ததில்லை. பதவிகளைக் கொண்டு எம்மை பிரிக்கவும் முடியாது.

நாம் என்றும் மக்கள் மத்தியில்தான் இருக்கிறோம். எமது எதிர்த்தரப்பிலுள்ள அமைச்சரொருவர் கூறுகிறார், தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவர்களுக்குத் தேவை என்று.

நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர்களுக்கு வழங்கத் தயாராகவே இருக்கிறோம். அடுத்த வாரம் என்றாலும் நாம் தயார்.

ஏப்ரல், மே வரை இருக்கவேண்டிய தேவையில்லை. ஆனால், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

அதைவிடுத்து, மக்களுக்கு வாக்குறுதி அளிக்காத, மக்களை முட்டாளாக்கும் வகையில், சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்யவே அரசு முற்பட்டுக்கொண்டிருக்கிறது.

இதற்குத்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இவர்கள் கோருகிறார்கள். இதுதான் இவர்களின் நோக்கமாகவும் காணப்படுகிறது – என்றார்.



# 2023 வரை ஜி.எஸ்.பி. வரிச் சலுகை இலங்கைக்குத் தொடர்ந்தும் கிட்டும்

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் உறுதி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.20

ஜி.எஸ்.பி. பிளஸ் (GSP+) வரிச் சலுகையை எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு பெற்றுக் கொடுப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தொழில்துறை ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அதன் கண்காணிப்பு செயற்பாடுகளில் எவ்வித மாற்றமும் இடம்பெறாது என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை, மாலைதீவு தூதுக்குழுவின் துணைத் தலைவர் தோர்ஸ்டன் பார்க்பார்ட் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு மேற்படி அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது, இந்நாட்டின் ஆடை உற்பத்தி துறைக்கே அதிகளவான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆடை ஏற்றுமதியில் நூற்றுக்கு 60 சதவீதமான ஏற்றுமதி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நாட்டு மொத்த ஏற்றுமதியில் 43 சதவீதம் ஆடை ஏற்றுமதியாகப் பிரதிபலிப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி வருமானத்தில் வருடத்திற்கு ஐந்நூறு கோடி அமெரிக்க டொலர்களை இந்நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கும் பிரதான உற்பத்தி தொழில்துறையாக ஆடை உற்பத்தி காணப்படுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், இதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பெற்றுக் கொடுக்கும் ஆதரவு தொடர்பில் அரசாங்கத்தின் நன்றியையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

அதேபோல், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முதலீட்டாளர்கள் இந்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வத்துடன் உள்ளனர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஸ்ரீலங்கன் விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அவர் அமைச்சரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

அது தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# இழந்த தமிழ் – முஸ்லிம் வாக்குகளை பெறுவதே எங்களின் அடுத்த இலக்கு

## எஸ்.பி. திஸநாயக்க கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 20

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடம் இழந்த வாக்குகளை பெறவேண்டுமென்பதில் உறுதியாக இருக்கின்றோமென அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங் களின் வாக்குகளையும் பெற்று , வெற்றியடைந்து சிறந்ததொரு ஆட்சி செய்யவே விரும்புகின்றோம் எனவும் அவர் கூறினார். (ஐ)

# இலங்கையின் வீதிகளை விளக்கும் புதிய வரைபடம் 29 இல் வெளியீடு

இலங்கையின் வீதிகள் பற்றிய புதிய வரைபடம் இந்த மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்படும் என்று இலங்கை நில அளவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த புதிய வீதி வரைபடம் வெளியிடப்படுவதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய வீதி வரைபடத்தில் அதிவேகப் பாதைகள், புதிதாக அமைக்கப்பட்ட வீதிகள் மற்றும் மருத்துவமனைகள் மற்றும் காவல் நிலையங்கள் பற்றிய தகவல்கள் இருக்கும்.

புதிய வீதி வரைபடத்தின் வெளியீடு நாட்டிற்கு வருபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இலங்கை இராணுவத்துக்கு இந்தியா வழங்கும் நிதி உதவி ஈழத்தமிழர்களை சிங்கள அரசு ஒடுக்கவே பயன்படுத்தப்படும்

## பெரும் விசனம் தெரிவிக்கின்றார் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ்

சென்னை,ஜன.20

இலங்கை இராணுவத்துக்கு பாதுகாப்பு கருவிகள் வாங்க இந்தியா வழங்கும் நிதி உதவியைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களை சிங்கள அரசு ஒடுக்கக்கூடும் எனவும் இவ்வாறு நிதி உதவி அளிப்பது ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல் எனவும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை இராணுவத்துக்கு இந்தியா ஐந்து கோடி டொலர் நிதி தருவது கண்டனத்திற்குரியது எனவும் அவர் கூறியுள்ளார்.

எனவே இலங்கைக்கு இந்தியா நிதி உதவி செய்யக் கூடாது என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈழத்தமிழர்கள் நலன், தமிழக மீனவர்கள் பாதுகாப்பு ஆகியன குறித்து இந்தியாவுக்கு கொடுத்த உறுதிமொழியை இலங்கை அரசு காப்பற்றவில்லை என்றும், இந்த சூழலில் இலங்கை இராணுவத்துக்கு பாதுகாப்பு கருவிகள் வாங்க இந்தியா உதவ வேண்டிய தேவை என்ன எனவும் ராமதாஸ் வினவியிருக்கிறார்.

ஈழத்தமிழர்கள் படுகொலை விவகாரத்தில் இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டிய இடத்தில் இருப்பதாகவும், இந்த நிலையில் அந்நாட்டு அரசுக்கு இந்தியா நிதி உதவி செய்வது வெகுமதியாகத் தான் அமையும் எனவும் ராமதாஸ் விமர்சித்துள்ளார்.

இந்தியாவிடம் இருந்து பெறும் நிதியை கொண்டு ஈழத்தமிழர்களைத்தான் சிங்கள அரசு ஒடுக்கும் என்றும், இதனால் இலங்கைக்கு எந்த நிதி உதவியும் இந்திய அரசு செய்யக்கூடாது என்றும் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வடக்கில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களில் 55 வீதத்தினர் பயிற்றப்படாதவர்களாம்!

கொழும்பு,ஜன.20

அரச பாடசாலைகளில் காணப்படும் சுமார் 60 ஆயிரம் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களில் சுமார் 15 ஆயிரம் பேர் பயிற்றப்படாதவர்கள் என கல்வி அமைச்சர் டக்லஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

விகிதாசார ரீதியில் இந்த எண்ணிக்கை 25 வீதமாகும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களில் வட மாகாணத்தில் மாத்திரம் விகிதாசார ரீதியில் 55 வீதம் பயிற்றப்படாதவர்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது மிக மோசமான ஒரு நிலைமை எனவும், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2020 இல் வெளியிடப்பெற்றது.